# முனைமலர்

## பிரதேச கலாசார மலர்

## 2013

கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைமலர்

## பிரதேச கலாசார மலர் - 2013

கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | - | முனைமலர் |
| வெளியீடு | - | கலாசாரப் பேரவை |
| முகவரி | - | பிரதேச செயலகம் - கல்முனை |
| பதிப்புரிமை | - | பிரதேச செயலகம் - கல்முனை |
| முதற்பதிப்பு | - | 01 - மே - 2013 |
| பக்கங்கள் | - | 40 |
| அச்சகம் | - | அப்னா அச்சகம் - மருதமுனை. |


# Book Details


| | | |
|---|---|---|
| Title | - | MunaiMalar |
| Publication | - | Cultural Council |
| Address | - | Divisional Secretariat - Kalmunai |
| Copy right | - | Divisional Secretariat - Kalmunai |
| First Edition | - | 01 - May - 2013 |
| Pages | - | 40 |
| Printers | - | Abna Printers - Maruthamunai |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


* கல்முனைப் பிரதேச செயலாளரிடமிருந்து.....
* திரும்பிப் பார்க்கிறேன்....
* பண்டைய மட்டக்களப்பின் குடிப்பரம்பலுக்குள் இன உறவுகள்
* சங்கையான கோலம் வேண்டும்
* முகில் வியாபாரி
* ராத்திரியின் ரகசியங்கள்
* அம்மா உனக்காக...
* கலாசாரத்திற்கு உயிரூட்டுவோம்!
* கல்முனை மாவட்டக் கச்சேரியும் புலவனால் பாடப்பட்ட அதன் உதவி அரசாங்க அதிபரின் சேவைகளும்
* எங்களன்பின் பிரதேச செயலாளர் !!
* எது கற்பு...
* அம்மா எனும் அழகிய கவிதை
* செல்லப் பாப்பா
* சிதைந்த சிற்பம்
* தெரிந்து கொள்வோம்
* முனைக்கான என் துணை
* மூடப்படும் வாசல்கள்
* ஆயுள் கைதி கவிதை
* அன்னை !
* முனை மலர்
* அன்றும்... இன்றும்...
* கல்முனைப் பிரதேசத்தின் புதுவரவு
* இதயம்
* கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் மருதமுனை – 05
* கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் செய்யப்பட்ட அபிவிருத்திகளின் ஒரு பார்வை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைமலர்

## பிரதேச செயலக கலாசார விழா - 2013

### மலராவதற்கு உதவியோர்

| | | |
|---|---|---|
| ஜனாப். எம்.எம். நௌபல் | – | பிரதேச செயலாளர் |
| ஜனாப். எம்.எம். ஹுசைனுடீன் | – | கணக்காளர் |
| ஜனாப். எம்.வி. அபுல் ஹசன் | – | நிர்வாக உத்தியோகத்தர் |
| ஜனாப். ஏ.ஆர்.எம். சாலிஹ் | – | தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் |
| திருமதி. வ. பற்பராசா | – | கலாசார உத்தியோகத்தர் |
| ஜனாப். ஏ.எச்.ஏ. மூாஹிர் | – | நிர்வாக கிராம உத்தியோகத்தர் |
| ஜனாப். ஏ.எல். ஜௌபர் | – | பிரதம முகாமைத்துவ உதவியாளர் |
| ஜனாப். எஸ்.எம். ஜமால்டீன் | – | கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. ரீ. குமுதினி | – | சிரேஸ்ட முகாமைத்துவ உதவியாளர் |
| ஜனாப். எஸ்.ஐ.எம். ஜிஹான் | – | கணனி இயக்குணர் |
| ஜனாப். யூ.எல்.எம். நக்கீப் | – | அச்சக உரிமையாளர், அப்னா அச்சகம் |

இந்த சிறிய மலரினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் இவ்வழகிய மலரினை வெளியிடுவதற்கு பல்வேறுபட்ட வழிகளிலும் உதவி செய்த மலராக்கற்குழுவிற்கும், கலாசார குழுவிற்கும், காத்திரமான படைப்புக்களையும் ஆசிச் செய்திகளையும் தந்துதவியோருக்கும் மற்றும் சகல அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரனையாளர்

# கிராம அபிவிருத்திச் சங்கம்

## மருதமுனை – 05

## Rural Development Socity
## Maruthmunai – 05

கல்முனைப் பிரதேச

"கலாசார விழாவும், புத்தக வெளியீடும்

சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

**M.I.M. AARIFF (JP)**
முகாமைத்துவ உதவியாளர் (CTB)
தலைவர் - கிராம அபிருத்திச் சங்கம்
மருதமுனை – 05

**P.M. NASRUDEEN (JP)**
Bsc(Nursing), Dip.in.Nursing, Dip-in-Counselling
சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர்
செயலாளர், கிராம அபிருத்தி சங்கம்,
மருதமுனை – 05

**A.C.A. RAHEEM**
பொருளாளர்
கிராமிய அபிவிருத்திச் சங்கம்
மருதமுனை – 05

**S.M.M. JAMALDEEN**
கிராம அபிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனைப் பிரதேச செயலாளரிடமிருந்து.....

எமது பிரதேச செயலக கலாசார விழா மலருக்கு முகப்புச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட இப்பிரதேசத்தின் பாரம்பரிய விடயங்களுக்கு மதிப்பளித்து இப்பிரதேச மக்களின் உயர்ந்த எண்ணப்பாடுகளுக்கு இசைவாக இவ்வாறான கலாசார ரீதியான வெளியீடுகள் எமது சமூகத்தை உற்சாகப்படுத்தும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இன்றைய சந்ததியினரும் எதிர்கால சந்ததியினரும் இம்மலரினை பார்வையிடுவதன் மூலமாக எமது பிரதேசத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

வருடாந்தம் நடாத்தப்படுகின்ற இவ்வாறான சாகித்திய விழாக்கள் மூலம் எமது பிரதேசத்து மக்களின் இன ஐக்கியம், சகோதரத்துவம், ஒற்றுமை போன்றன ஏற்பட்டு எமது நீண்ட தூரப்பிரயாணத்துக்கான அத்திவாரமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் எமது பிரதேசத்தின் கலாசாரப் பாரம்பரியங்களை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாகவும் இதனை ஆக்கிக் கொள்ளமுடியும். பிரதேசத்திற்கான கலாசாரப்பேரவை இருந்த போதிலும் நிதி மட்டுப்பாடுகள் காரணமாக சிறந்த மலரொன்றை வழங்க முடியாமல் போனதையிட்டு பிரதேச செயலாளர் என்ற வகையில் கவலையடைகின்றேன்.

இருந்த பொழுதிலும் எமது அலுவலகத்திலுள்ள உத்தியோகத்தர்கள் சிலர் ஒன்று சேர்ந்து இச்சிறிய கலாசார மலரினை வெளிக்கொண்டுவருவதில் வெற்றி பெற்றுள்ளனர். அந்த வகையில் இம்முயற்சியில் ஈடுபட்டு அயராது உழைத்த அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர் களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இம் மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

- நன்றி -

**எம்.எம்.நௌபல்**
பிரதேச செயலாளர்,
கலாசார குழுவின் தலைவரும்,
பிரதேச செயலகம்,
கல்முனை.
2013.05.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கிறேன்....

வாடைப் பனி மலரே
வண்ண விழித் தாமரையே
கோடைக் கனி அமுதே
கொஞ்சி வரும் குளிர் நிலவே
எனதந்திப் பொழுதினிலே
எழுந்த அருணோதயமே
இலையுதிர் காலமென்னில்
மொட்டுவிட்ட ரோசாவே!

நான்
வழுக்கி விழுந்து விட்டேன்
நீ சிந்திய
அன்புச் சிறு துளியில்.

ஒரு பாதி நீ அருந்தி
மறு பாதி எனக்கு வைத்த
அந்த அந்திப் பொழுதை
இன்றும் பருகிக் கொண்டிருந்தேன்

முற்றம் பெருக்கி
முந்தானை சரிந்து விழ
எனைக் கண்டு நாணி
பட்டுக் கையிரண்டை கோதியணைத்து
நீ திரும்பி நின்ற
இளங்காலைப் பொழுதின்னும்
விழித்திரையில் விளையாடிக் கிடக்கிறது

அமர் முடுகிச் செல்லும்
என் பயணத்தை
ஆர்முடுக வைத்த அழகே
நீராடிக் கரையேறுமென்னை
மீண்டும்
நீந்த வைத்த நேசமே

உன்னால் கர்ப்பமாகி
பிரசவித்த கவிதைக் குழந்தைகளை
கன்னங் கிள்ளி
வாரி அணைக்காது
நீ போன கணங்களெல்லாம்
என்னில் கள்ளிச் செடியாய்
பூத்துக் கிடக்கிறது.

எனது நொக்கியா போனை
மெத்தவும் காதலிக்கின்றேன்
வரும் SMS, Call களெல்லாம்
உனதாக இருக்குமென்று.

இடுக்கிய உன் நினைவுகளை
இறக்கிவிட எண்ணுகையில்
மனசு கனக்கிறது.

அடிக்கடி காணாமல் போகுமென்
கவிதைக் குழந்தைகளை
கூட்டி வருகின்றேன்
உன் வீட்டு முற்றத்தில் வைத்து

நீ விருந்தோம்பிய பொழுது
உன் விரல் பட்ட கணங்களை
இன்னும் நான்
தொட்டுக் கொண்டிருக்கிருக்கிறேன்.

“என் வருடங்களில்
நீங்கள் இருந்திருக்கக் கூடாதா” என்று
தொடுத்த அன்புக் கணையில்
கோடிக் கவிதைகள்
கூவி எழுகின்றன.

பிரிந்து போன உன் நேசத்தை
இன்னும் வைத்திருக்கின்றேன்
முடிந்து போன “சென்ற்” போத்தலை
வைத்திருப்பது போல

காலத்திடலில்
சற்று முந்தித்தான் ஓடிவிட்டாலும்
உன்னையும் ஒரு தரம்
திரும்பி பார்க்கிறேன்.

**எம்.வி. அபுல் ஹஸன்**
நிர்வாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பின் குடிப்பரம்பலுக்குள் இன உறவுகள்

பண்டைய மட்டடக்களப்பில் காணப்பட்ட இனங்களுக்கிடையிலான உறவுகள் பல பரிமாணங்களை கொண்டிருந்தன. இது தனித்துவமான கலை கலாசார மற்றும் பண்பாட்டு ரீதியான தொடர்புகளை உள்ளடக்கியிருந்தன. இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது பண்டைய மட்டக்களப்பில் இனங்களுக்கிடையில் இருந்த உறவு சற்று மாறுபட்டதென்றே கூறுதல் வேண்டும்.

தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றில் மட்டக்களப்பு வாவி மிக முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருந்ததை வரலாறுகள் குறிப்பிட்டுட்காட்டுகின்றன. ஐம்பது மைல் நீளமுள்ள மட்டக்களப்பு வாவியானது ஆரம்ப கால வர்த்தகர்களான அராபியர், கிரேக்கர், பாரசீகர்கள் போன்றோர் வந்திறங்கு துறைமுகமாகவும் அதன் மூலம் சம்மாந்துறை ஊடாக கண்டி வரை தரைமார்க்கமாக செல்வதற்கு காலாக அமைந்திருந்த ஒன்றாகவும் திகழ்கின்றது. கடலுக்கும் மட்டக்களப்பு ஆற்றுக்கும் இடையே காணப்பட்ட"மண்மலைகள்" படகுகளும், கட்டுமரங்களும் மற்றும் தோணிகளும் பாதுகாப்பாக தங்கி நிற்பதற்கு பெரிதும் உதவின என்று "சுலைமான்", அபூ செய்து என்ற இரு யாத்திரிகள் (Voyages of Two Mohamdans) கொடுத்த தகவல்களில் இருந்து தெரிந்து கொள்கின்றோம். இவற்றின் இரு மருங்கிலும் அமைந்திருந்த குடியேற்றங்கள் மூலம் வெளிநாட்டு வர்த்தகர்கள் கூடுதலாக கவர்ந்திழுக்கப்பட்டார்கள் என்பதை விட இப்பிரதேசமானது சிறந்த நாகரிகமடைந்த இன ஒற்றுமையை இன்று வரை பேணக்கூடிய சமூகம் ஒன்றை கட்டியெழுப்பிய ஆறு என்றால் அதுமிகையாது. மேலும், இவ்வாற்றினூடாக பண்டைய காலம் முதல் இப்பிரதேசத்திற்கு படகுகளும், தோணிகளும் வந்து போயின என்பதற்கு கல்வெட்டுக்களும் பழைய நாணயங்களும் சான்று பகர்கின்றன.

"வேற்று நாட்டவர்கள் ஈழத்திற்கு வந்து கலக்குமுன்னர் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகிய மூன்று வகுப்பினரும் மதம், மொழி வேறுபாடுன்றி ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கு போதிய சான்றுகள் உள்ளன என்று வீ.சி. கந்தையாவின் "மட்டக்களப்பு மான்மியம்" (1964) கூறுகின்றது.

ஆரம்ப காலத்தில் இப்பிரதேசமானது ருஹுணு பிரதேசத்தின் ஒரு முக்கிய பகுதியாக அமைந்திருந்ததாக வரலாற்று ஆவணங்களின் மூலம் கண்டு கொள்ளகூடியதாக இருக்கின்றது. பண்டைய மட்டக்களப்பின் தென்கிழக்கு பிரதேசமானது விவசாய வளமிக்க இடமாகவும், தலை சிறந்த வர்த்தகம் இடம் பெறும் இடமாகவும் காணப்பட்டது. இக்காலமானது கி.மு. 100 ஆம் ஆண்டில் "காவன் திஸ்வின்" இராசதாணி உருவாக்கப்பட்ட காலமாகும். அக்காலத்தில் அராபிய கப்பல்கள் தென்கிழக்கு கரைக்கு தங்க தளபாடங்களை துட்டகெமுனுவுக்கு கொண்டு வந்தன என்று வரலாறு கூறுகின்றது. இதன் மூலம் பண்டைய காலத்தில் அராபியர்கள் இப்பிரதேசத்துடன் நெருங்கிய வர்த்தக கலாசாரத் தொடர்புகளை கொண்டிருந்தனர் என்று அறிந்து கொள்ளலாம்.

இந்தப் பிராந்தியத்தை "சதா திஸ்ஸா" மன்னன் ஆட்சி செய்த போது இப்பிரதேசம் பரந்தளவில் விவசாயம் செய்த இடமாக காணப்பட்டுள்ளது. மேலும் இந்த அரசனின் ஆட்சிக்காலத்திலேயே பண்டைய அம்பாறை பிரதேசத்திற்கு "திகாமடுல்ல" எனும் பெயர் வழங்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் தற்போதைய இறக்காமம் வரிப்பத்தான்சேனைப் பிரதேசத்தில் அராபியர்கள் குடியாட்டங்களை கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்காமம் குளம் கி.மு. 200 ம் ஆண்டில் தொடங்கப்பட்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இப்பிரதேசத்தை அனேக முஸ்லிம் குடும்பங்கள் தற்போது வாழ்வதால் பண்டைய திகாமடுள்ள பிரதேசத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்ந்திருப்பார்கள் என்பதற்கு இக்கிராமமே சான்று பகர்கின்றது. மேலும் தென் மாகாணத்தில் இருந்து "முப்பணை" ஊடாக பொத்துவிலுக்கும் இன்னுமொரு வழியால் இறக்காமத்திற்கும் முஸ்லிம்கள் குடியேறியதாக ஒரு கருத்தும் உள்ளது. கண்டி இராசதானியின் முக்கிய இடமாக காணப்பட்ட "ஊவ வெல்லஸ்ஸ" பகுதியினூடாக கொண்டவட்டுவான் மற்றும் இறக்காமம் சம்மாந்துறை பகுதிகளுக்கு முஸ்லீம்கள் குடியேறியதாகவும் தகவல்கள் அமைந்துள்ளன.

மட்டக்களப்புத் தொடர்பாக பூர்வீக சரித்திரத்தைக்கூறும் தமிழ் ஏட்டு பிரதிகள், கல் வெட்டுக்கள் என்பன அராபியர்கள் பாணமையில் மரம் வெட்டி ஏற்றுமதி செய்ததையும் மட்டக்களப்பு, கல்முனை போன்ற பிரதேசங்களில் வர்த்தகத்திற்குப் பாளையம் போட்டதையும் தெளிவாக் கூறுகின்றன. மேலும் கோயில் திருவிழாக்களில் "குகாரத்து மரபினர்" கலந்து குடியேறியதையும் இவ்ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையின் கிழக்கு பிரதேசமான பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து விளைந்த நெல்லை அக்கரைப்பற்றிற்கு அண்மித்த பகுதியிலுள்ள துறை முகங்களிலிருந்து அராபியர் வெளிநாட்டுக்குக் கொண்டு சென்றனர் என்பதை "தொலமியின்" வரைபடமும் (கி.பி. 140) குறிப்புக்களும் கூறுகின்றன. இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு வாவி முக்கியம் பெற்றிருந்ததோடு கல்லாறு, காரைதீவு, கோமாரி, திருக்கோயில் மற்றும் பாணம துறைமுகங்களும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இக்காலப்பகுதியில் அறுகம் குடாவானது (Lithus Mahgnus) என்ற பெயரில் விளங்கியதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய துறைமுகங்களினூடாகவே ஆராபியர் தமது வர்த்தக, கலாசார மற்றும் குடும்ப உறவுகளை பேணி வந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இவர்களே தொலமிக்கு இத்துறைமுகங்கள் பற்றிய தகவல்களை வழங்கியிருந்தனர். அபூ-செய்யது, அல்-புர்பான், அல் இத்ரீசி, போன்ற புகழ்பெற்ற புவியியலாளர்களும் 12 ஆம் நூற்றாண்டளவில் கிழக்கின் துறைமுகங்களை தமது வரைபடங்களிலும் குறிப்புக்களிலும் குறித்து வைத்துள்ளனர்.

பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தை பொறுத்தவரையில் "திமிலர்கள்" எனும் ஒரு குழுவினரே மட்டக்களப்பில் ஆரம்பக்குடிகளாக இருந்திருக்கலாம் என்று வரலாற்று நூல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் "கலிங்க சக்கரவர்த்தி" முத்துக்குளிப்பதற்காக "முக்குவர்" எனப்படும் ஒரு குழுவினரை "சூரிய காட்டிலிருந்து" இலங்கைக்கு கொண்டு வந்து யாழ்குடாக்காட்டில் குடியேற்றினான் என்று வரலாற்றுக் குறிப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. கி.பி. 5ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் இருந்து "முக்குவர்கள்" கிழக்கு மாகாணத்தில் முக்கிய பகுதிகளான மட்டக்களப்பு பகுதிக்கு குடியேறினார்கள். இப்பிரதேசத்தின் ஆதி குடிகளான திமிலர்கள் அடிக்கடி முக்குவர்களின் திருவிழாக்களில் புகுந்து குழப்பம் விளைவித்ததுடன் அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களையும் பறித்துக் கொண்டு சென்றதாக அறிய முடிகின்றது. இவ்வாறான ஒரு நிலையில் முக்குவர்களுக்கு பாதுகாப்பு உதவிகள் தேவைப்பட்டது.

எனவே இப்பிரதேசத்தில் குடியேறி இருந்த அராபிய வர்த்தகர்களிடம் பாதுகாப்பு உதவி கோரியதன் பயனாக "திமிலர்" தலைவரான மாணிக்கத் தலைவரிடமிருந்து முக்குவர்களை காப்பாற்றியதன் மூலம் தங்களது "அழகிய குலப் பெண்களை திருமணம் செய்து கொடுத்து தங்களது கிராமங்களுக்கு அருகில் குடியேற்றினார்கள் என்று தற்போதைய குடிப் பரம்பலின் மூலம் கண்டு கொள்ள முடியும். மேலும் தங்களது அழகிய குலப் பெண்களை அராபியர்கள் காபாற்றியதற்காக "முக்குவர்கள்" அப்படியே இஸ்லாத்தை தழுவி மட்டக்களப்பில் குடியேறினர் என்று எம்.டி.இராகவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். இதனால் தான் என்னவோ முக்குவர்களிடம் காணப்பட்ட குடி வழிகளில் ஏழு குடிகள் இன்னும் மருதமுனை,கல்முனைக்குடி,சாய்ந்தமருது போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

"இலங்கைச் சோனகர்கள் பற்றிய கடந்த கால நினைவுகள்" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இக்கட்டான சூழ்நிலையில் ஆபத்துக்கு கைகொடுத்து உதவிய முஸ்லிம் இனத்தவர்களான "பட்டாணியர்" என்ற ஒரு வகுப்பினர் பொட்டணி வியாபாரிகளாகப் பிரவேசித்த இந்த பட்டாணியர் சிவந்த நிறமும், பருத்த தோற்றமுள்ள பலசாலிகளாகவும், திடகாத்திரமான தோற்றத்தை உடையவராகவும் இருந்தனர் என்று கூறுகின்றது.

வங்களா விரிகுடா கடலானது "அராபியர்களின் வாவி" (Arabian Lake) என்று கூறுமளவுக்கு முக்கியத்துவம் பெற்று காணப்பட்டுள்ளது. அராபியர்களின் அதிகமான கப்பல்கள் மட்டக்களப்பு துறைமுகைத்தை நோக்கிவந்துள்ளமை முக்கியமான ஒரு விடயமாகும். இவ்வாறு வங்களா விரிகுடா கடலில் பயணித்த ஒரு கப்பலானது கடுமையான புயலில் சிக்கியதன் காரணமாக மட்டக்களப்புக்கு தெற்கே அமைந்துள்ள "பூ நொச்சி முனை" என்ற இடத்தில் தரைதட்டியாக கூறப்படுகின்றது. இக்கப்பலில் வந்தவர்களும் இங்கே இருந்த பழங் குடியிருப்பின் ஒத்தாசையுடன் குடியேறியிருந்தனர். இவர்கள் அனைவரும் இணைந்து முக்குவர்களுக்கு உதவியதன் காரணமாகவும் முக்குவப் பெண்களை காப்பாற்றியதன் காரணமாக இக்குடியிருப்பினை காத்தான்குடி என்று அழைக்கப்படுவதாக வரலாறுகள் கூறுகின்றன.

அக்காலத்தில் குடியேறியிருந்த பட்டாணியர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்தும் வட இந்தியாவிலிருந்தும் வருகை தந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. இவர்கள் பலம் பொருந்தியவர்களாக இருந்ததனாலேயே "திமிலர்களின்" தலைவரை யுத்தத்தின் மூலம் வெற்றி கொண்டு கொலை செய்ததாக கூறப்படுகின்றது. இந்த இடமே தற்போது "சத்துருக்கொன்றான்" என அழைக்கப்படுகின்றது. மேலும் அப்போதைய பட்டாணியர்களும் முக்குவர்களும் பல்வேறு குழுக்களாக பிரிந்து சென்று திமிலர்களை விரட்டியடித்ததன் பின்னர் அனைத்துப் படைப்பிரிவினரும் ஒன்று சேர்ந்த இடமே "சந்திவெளி" என்று அழைக்கப்படுகின்றது. அத்துடன் திமிலர்களை பனிச்சங்கேணி வரை சென்று விரட்டியடித்ததோடு அவர்களை திமிலத்தீவுக்குள் முடக்கிவைத்ததாகவும் கூறப்படுகின்றது. மேலும் யுத்தத்தில் ஈடுபட்ட சகல குழுவினரும் ஒன்று சேர்ந்து களைப்பாறிய இடமே "வந்து ஆறிய மூலை" என்று அழைக்கப்பட்டு தற்போது "வந்தாறு மூலை" என்று அழைக்கப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தில் திமிலர்களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்காக நிரந்தர பாதுகாப்பரன்கள் தற்போதைய ஏறாவூர் பிரதேசத்திலேயே ஏற்படுத்தப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது. இதன் மூலமாகவே இவ் ஊருக்கு "ஏறாவூர்" எனப் பெயர் வந்ததாக கூறப்படுகின்றது.

"காட்டான், பட்டாணி, சுல்தான், சிக்கந்தர் வேடரோடு வர்த்தகஞ் செய்வதற்காகச் சில துலுக்கக் குடும்பங்களுடன் மண்முனைக்கடுக்கப்பாளையம் போட்டு வர்த்தகம் செய்தனர்." என்று மட்டக்களப்பு மான்மியம் (1959) என்னும் நூல் குறிப்பிடுகின்றது. எனவே மட்டக்களப்பு பிரதேசத்திற்கு பட்டாணிகளும் துலுக்கர்களும் "வேடர்கள்" இப்பிரதேசத்தை ஆட்சி செய்த காலத்தில் இருந்தே வந்துபோயுள்ளனர் என்பது தெளிவாகின்றது. மேலும் இந்நூலிலுள்ள "குலவிருதுகளில்" ஒன்று முஸ்லிம்கள் அணியும் தொப்பி பற்றி சொல்லிப்பாடுவது இவ்விரு இனங்களுக்குமிடையில் கலாசார உறவு மிகுந்திருந்ததை அவதானிக்க முடியும் மேலும் இப்பிரதேசத்திலுள்ள இந்துக் கோயில்களில் இடம் பெறுகின்ற பூசைகளுள் "பட்டாணிப் பூசை" ஒன்று ஏற்பாடு செய்யப்படுவதும், "பட்டாணி மடை" வைக்கப்படுவதும் முக்கியமானதாகும். அத்துடன் குருமன் வெளி இந்துக் கோயிலில் தொப்பி அணிந்த சிலை ஒன்று பல வருடங்களாக காட்சி தந்திருப்பதன் மூலம் முஸ்லீம்கள் தமிழ் மக்களுடன் பிரிக்க முடியாத உறவுகளை கொண்டிருந்தனர் என்பதற்கு பெரிய ஒரு எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் அரேபியா, தென்னிந்தியா, முதலிய இடங்களிலிருந்து வருகை தந்த முஸ்லீம்கள் மட்டக்களப்பு வாவியூடாக வருகைதந்து துறைநீலாவணையிலும் சம்மாந்துறையிலும் வணக்கஸ்தலங்களை அமைத்து வாழ்ந்து வந்ததன் காரணமாக இங்கு வாழ்ந்த மக்கள் அராபியர்களின் சன்மார்க்க ஒழுக்க நெறி, வைத்தியம் முதலியவற்றினால் ஈர்க்கப்பட்டு இஸ்லாமிய கோட்பாடுகளை பின்பற்றத் தொடங்கினர். மேலும் இதன் மூலம் திருமணத் தொடர்புகளும் ஏற்பட்டுத்தப்பட்டன. இதன் மூலமே தாய்வழி சமூக அமைப்பான "குடிமரபு" தோன்றக் காரணமாயிற்று. மேலும் துறைநீலாவணையில் "இப்றாஹீம் பிட்டி" என்னும் ஓர் இடம் இன்றும் அவ்வாறு அழைக்கப்படுகின்றது. இந்த இடத்தில் குடியிருந்த முஸ்லீம்கள் சிலர் தமது ஜீவனோபாய தொழிலாக நெசவையே கொண்டிருந்தனர். துறைநீலாவணைப் பிரதேசம் நெசவு நூலை தயார்படுத்துவதற்கு பொருத்தமற்றதாக இருந்ததனால் மருதமுனையின் கடற்கரை ஓரமாக இருந்ததாக சில தமிழ் குடும்பங்களுடன் தங்களது இருப்பிடங்களை ஒற்றுமையுடன் மாற்றிக் கொண்டதாக பழங்கால மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர் என்று புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் தனது "மருதமுனையின் வரலாறு" என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

எஸ்.டிபிள்யு. கொற்றின்டென் என்பவரின் "Short History of Ceylon" என்றும் நூலின் படி மேல் மாகாணத்தில் குடியிருந்த பெரும்பாலான முஸ்லீம் மக்கள் போர்த்துக்கேயரின் அடாவடித்தனங்களை தாங்கமுடியாமல் கண்டியை ஆட்சி செய்த செனரத்மன்னனிடம் சரணடைந்திருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறனவர்களில் ஏறக்குறைய 4000 பேரை கி.பி. 1625 இல் சம்மாந்துறையில் உள்ள மட்டக்களப்பு கல்முனைப் பிரதேசத்திலும் குடியேற்றியதாக கூறப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணம் முஸ்லீம்கள் சிங்கள அரசர்களோடு கொண்டிருந்த சிறப்பான உறவு காரணமாகவும், மட்டக்களப்பும் துறைமுக வர்த்தகம் தமது கட்டுபாட்டின் கீழ் தமது விருப்பப்படி நடைபெற வேண்டும் என்பதற்காகவும் சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களை இப்பிரதேசங்களில் குடியேற்றினார்கள் என்று வரலாற்றுத் தகவல்கள் மூலம் கண்டு கொள்ள முடியும். இவ்வாறு வந்தவர்களுக்கு மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிவாகின்றது இவ்வாறான ஒற்றுமையானது இனங்களுக்கிடையில் சமூக, கலாசார பண்பாட்டு விடயங்கள் இன்று வரை வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு குடியேறியவர்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளை போல நகமும் சதையும் போல வாழ்ந்துள்ளார்கள். இவ்வாறு வருகைதந்த முஸ்லீம்கள் இங்கிருந்த சமூக கலாசார அமைப்பு முறைகளையும், தாய் வழி குடி வழிப்பரம்பரையையும் ஏற்றுக் கொண்டனர். இதன் மூலம் வாழைச்சேனை தொடக்கம் பொத்துவில் வரையுள்ள பிரதேசங்களில் உள்ள முஸ்லீம்களிடையே குடிமுறையானது இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

தமிழ் முஸ்லிம் மக்களிடையே இந்த குடிவழிப்பரம்பரையானது பல நூற்றாண்டுகளாக நிலவிவருவதால் கிழக்கு பிரதேசத்தில் இரண்டு இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்துவருவதை அவதானிக்கமுடிகின்றது. இரண்டு பிரிவினிடையே தாயதிச் சட்டம் என்பது மரபுவழிவந்த பராம்பரியச்சட்டமாகும். மருமக்கள்தாயம் என்பது இதனையே குறிக்கின்றது. மேலும் பெரிய குடிவழிப்பரம்பரையைப் பொறுத்தவரையில் தனி ஒரு குடிக்குள் 1ம்,2ஆம்,3ஆம் பாகங்களும் உண்டு. இப்பாகப்பிரிவானது வகுத்துவாரை (தாய்வழி) அடிப்படையாக் கொண்டது. இவ்வகுத்துவார் முறையானது தமிழ் மக்களிடையே பொதுவாகக் காணப்படும் ஒரு முறையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக தமிழ் முஸ்லிம் மக்களிடையே ராசாப்பிள்ளை குடி, சின்னக்கதிரன்குடி, செட்டி குடி, பொன்னாச்சிகுடி, வெள்ளரசன் குடி, மூத்தநாச்சி குடி, இளையநாச்சி குடி, கலிங்கனார் குடி, வரிசை நாச்சி குடி என்பன பொதுவான குடிகளாகும். அதே போன்று சிங்கள மக்களிடையே இருந்து வந்த "கத்தறை" என்னும் பதமும் முஸ்லீம்களிடையே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களிடம் "கத்தறை" அமைப்பு காணப்படுவது போல முஸ்லீம்களிடையே "கத்தறை" என்னும் அமைப்பு நிலவுகின்றது. இது "கெதற" என்று சிங்களச் சொல்லில் இருந்து பெறப்பட்டிருக்காலம். இது சிங்களவர்கள் மத்தியில் குடி மரபுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும் முஸ்லீம்களிடம் சிங்களப் பெயரிலும் குடிப்பெயர்களே பயன்படுத்தப்பட்டுவருகின்றன. "வெத்தசிங்க ஆராய்ச்சிக்குடி" "ஆராய்ச்சிகுடி" வெத்த சிங்க பவளனவர் ஆராய்ச்சிக்குடி" முதலானவை அட்டாளைச்சேனையிலும் மற்றும் சம்மாந்துறைப்பிரதேசத்தில் "பட்டி சிங்க பவன ஆராய்ச்சி குடி" வழங்கி வருவதைக்காணலாம். இத்தகைய சிங்களப் பெயரிலான குடிகள் மூலம் சிங்கள உறவின் வலுவினை புலப்படுத்துவதை அவதானிக்கலாம்.

பண்டைய மட்டக்களப்பின் தென்பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கேயும் திமிலர்களின் தொல்லை இருந்ததாக் கூறப்படுகின்றது. அக்கரைப்பற்று, திருகோவில், தம்பிலுவிலில் இருந்த தமிழ்மக்களுக்கு முஸ்லீம் பெருங்குடி மக்களின் உதவியுடன் இப்பிரதேசத்தில் திமிலர்களுடன் பெரும் போர் நடந்ததாகவும் கூறப்படுகின்றது. இதற்கு சான்றாக அட்டாளைச் சேனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற "முள்ளிக்குளத்து மலை" யை அண்டிய பிரதேசத்திற்கு "படை வெட்டிய குடா" எனப் பெயர் பெற்றது. இப்பிரதேசத்திலும் அராபியர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் திருமணத் தொடர்புகளும் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. இதனாலேயே திருக்கோவில் பகுதியில் "சூபி" ஒருவரின் அடக்கஸ்தலம் இருப்பதற்கு சான்றுகளும் உள்ளன.

போர்த்துக்கீசர் 1505ஆம் ஆண்டு இலங்கையில் காலடி எடுத்து வைத்தது முதல் டச்சுக்காரர் இலங்கையை கைப்பற்றும் வரை (1875) ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் இலங்கையில் வாழ்ந்த முஸ்லீம்களுக்கு போர்த்துக்கேயர் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்தனர். மேற்கு பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லீம்களுக்கு சிங்களவர் உதவி செய்தது போல கிழக்கு பிரதேசத்தில் தமிழ் மக்கள் உதவி செய்தார்கள் என்று கூறப்படுகின்றது. போர்த்துக்கேயரின் அடாவடித்தனத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் "செனரத்" மன்னனுக்கும் (1602- 1635) "இராஜசிங்க மன்னனுக்கும்" (1635 - 1658) கிழக்கில் குடியேறிய முஸ்லீம்களும் மட்டக்களப்பு முஸ்லீம்களும் உதவியதாக வரலாறுகள் கூறுகின்றன. மேலும் போர்த்துக்கேயருடன் சண்டை செய்த கண்டியை ஆண்ட மன்னன் இராஜசிங்க மன்னனுக்கு தமிழ் முஸ்லீம் மக்கள் கிழக்கு கரையோரத்திலிருந்து உதவியதாகக் கூறப்படுகின்றது. "ஆரம்பத்தில் கண்டி மன்னன் முஸ்லீம்களை மட்டக்களப்பையும் ஏனைய துறைமுகங்களையும் பாதுகாக்ககூடிய படையாகவே கிழக்கிற்கு அனுப்பினான்." என்று சைரஸ் டீ.எப். அபயகோன் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். முஸ்லீம்கள் தனது வியாபார கப்பல்கள் மூலம் ஒட்டகங்ளை கொண்டு வந்ததன் பயனாக 17 ஆம் நூற்றாண்டில் இடம் பெற்ற "வெள்ளவாய" யுத்தத்தில் முஸ்லீம்களது "ஒட்டகைப்படைப்பிரிவு" கலந்து கொண்டதன் மூலம் முஸ்லீம்களது இராணுவ வல்லமையை எடுத்துக்காட்டுவதோடு சிங்கள் மக்களுடன் சிறந்த உறவினைக் கொண்டிருந்தனர் என்பதும் புலப்படுகின்றது.

14-12-1766 ஆம் ஆண்டு கண்டிய இராசதானிக்கும் டச்சுக்கம்பனிக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி மட்டக்களப்பு கரையோரம் டச்சுக் கம்பனியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இக்காலத்தில் மட்டக்களப்பு பிரதேசம் எட்டுப்பற்றுக்களாக பிரிக்கப்பட்டிருந்தன. பானமைப்பற்று, அக்கரைப்பற்று, கராவகுப்பற்று, மண்முனைப்பற்று, எருவில்பற்று, போரைதீவுப்பற்று, மட்டக்களப்புபற்று, கோரளைப்பற்று என்பன அவையாகும். இப்பிரதேசங்களில் தமிழ் முஸ்லீம்களே குடியிருந்தனர். சிங்களவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு இருந்தனர் என "ஜேக்கப் பெர்ணாந்து" தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு காரணம் டச்சுக்கம்பனியின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான சிங்களவர்கள் மலைப்பிரதேசத்தினை நோக்கி நகர்ந்தமையே காரணமாகும். முஸ்லீம்கள் சிறு தொகையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரளைப்பற்று, ஏறாவூர், புளியந்தீவுப் பிரதேசத்தில் குடியேறியிருந்தனர். அதே வேளை தமிழர்கள் அதிகமாக குடியிருந்தனர். அக்காலத்தில் இப்பிரதேசங்களில் இரண்டு இனங்களும் மிகவும் ஒற்றுமையாகவும் அன்னியோன்னியமாகவும் வாழ்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அதே வேளை முஸ்லீம்கள் பெரும்பாலாக பாணமைப்பற்று அக்கரைப்பற்று, கரைவாகுப்பற்று, நாடுகாடுப்பற்று போன்ற தென்கிழக்கு பகுதியில் வாழ்ந்துள்ளனர். இதனாலேயே தற்போது பெருந்தொகையாக அடாத்தியான முறையில் வாழ்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிக்க முடியும்.

1796 ஆம் ஆண்டு பிரித்தானியர் மட்டக்களப்பு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கண்டியை கைப்பற்றி சிவில் நிருவாகத்தை உருவாக்கினர். "வெல்லஸ்ஸ" கலவரத்தின் பின்னர் பிரித்தானிய ஆட்சி மட்டக்களப்பு பிரதேசவாசிகளைப் பொறுத்தவரையில் பெரிதும் உதவியாக அமைந்திருந்தது. இக்காலத்தில் முஸ்லீம்கள் வன்னியர்களாகவும், உடையார்களாகவும், விதானைகளாகவும், பிஸ்கால் உத்தியோகத்தர்களாகவும் தமிழர்களோடு இணைந்து நிருவாகப்பணிகளைப் புரிந்தனர்.

ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சகல பாடசாலைகளிலும் இரண்டு இனமும் ஒன்றாகவே கல்வி கற்று வந்தனர். அதே போன்று ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசும் சகோதரர்களே இருந்துள்ளனர். அலுவலகம் தொடக்கம் கடற்கரை வரை தமிழ் முஸ்லீம் மக்களிடையே உறவு நீடித்து வந்துள்ளது. சமய நடவடிக்கைகளில் வேறுபட்டு காணப்படினும் பெரும்பாலான சடங்குகள் ஒன்றாகவே அமைந்திருந்தன. அத்தகைய சடங்குகளில் ஒன்றாகவே கலந்து கொண்டுள்ளனர். பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோயில் "தீப்பள்ளயம்", கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளிவாசல் "கொடியேற்றம்" போன்ற விழாக்களில் இரு சமூகங்களும் ஒன்றாகவே பங்குபற்றுகின்றன. அட்டப்பள நாற்பது முழ அவுலியாவின் தர்ஹா, காரைதீவில் பக்கீர்சேனை தைக்கா என்பன போன்ற தலங்களில் இரண்டு குழுவினரும் நேர்ச்சை முதலான நடவடிக்கைகளில் இன்று வரை ஈடுபட்டு வருகின்றனர். இலக்கிய உறவைப் பொறுத்தவரையில் தமிழர்கள் முஸ்லீம்களின் இலக்கியத்தையும் முஸ்லீம்கள் தமிழர்களின் இலக்கியத்தையும் கற்றுத்தேர்ந்துள்ளதோடு இலக்கியத் துறையில் ஒன்றாகவே கலந்துள்ள காலங்கள் உண்டு. ஆரம்ப காலத்தில் இருந்த தமிழர்களின் "திண்ணை முறை" பள்ளி கூட முறையை ஒத்த முஸ்லீம்களின் "ஓதப்பள்ளி" முறை அமைந்துள்ளதன் மூலம் இரண்டு பிரிவினரும் வாழ்விலும் சாவிலும் கூட ஒத்துறவாடி வந்துள்ளனர் என்பது மேற்குறிப்பிட்ட விடயங்கள் சான்று பகிர்கின்றன.

இரண்டு சமூகங்களுக்கிடையில் காணப்பட்ட வாழ்வியல் நடைமுறைகளைப் பார்க்கும் போது பெரும்பாலான விடயங்கள் இரண்டு சமூகங்களுக்கிடையில் ஒத்துப் போகக்கூடியதாக உள்ளது. பேச்சு மொழியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஊருக்கும் வித்தியாசமாகவே காணப்பட்டன. ஆனால் கணவன், மனைவி, மகன், மகள், பிள்ளை போன்ற சொற்கள் இரண்டு சமூகங்களுக்கும் பொதுவானதாகும். உணவு வகையைப் பொறுத்தவரையில் பலகாரம், கொழுக்கட்டை, சீனிமா, பட்டு, இடியப்பம், பாலப்பம், கோழியப்பம், தேநீர், பசும்பால், கோப்பி போன்றன பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களாகவும், உணவுகள் தயாரிப்பிலும் இரண்டு இனங்களும் ஒரே வகையிலேயே தயாரிப்பர். தரையில் இருந்து நீரை அள்ளி எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொற்களுக்குள் பூவல், கிணறு போன்றவற்றை குறிப்பிடலாம். நீரை எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட துலா, துலாந்து, துலாக்கால், பத்திக்கை, அச்சுலக்கை, குரங்கொட்டி போன்ற பெயர்கள் மற்றும் எல்லைக்காகப் போடப்படும் "வேலி" என்னும் பதம் மற்றும் ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்ட குளக்கரை, கேணிக்கரை, கேணி போன்ற சொற்கள் ஒன்றாகவே இன்னும் பயன்படுத்தி வருகின்றனர். அரிசி வகைகளைப் பொறுத்தவரையில் பெருநெல், கறுப்பன், சீநெட்டி, பச்சைபெருமாள் பொதுவாக பயன்படுத்தப்பட்ட சொற்களாகும். திருமணங்களில் மாப்பிள்ளை, பொன், தாலி, கூறை, கால்மாறுதல், பால் பழம் கொடுத்தல் போன்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களாகும். முஸ்லீம்களிடத்தில் தாய்வழிக்குடி முறைமை பின்பற்றப்படுவது போல திருமணச் சடங்குகளிலும் அனேக விடயங்கள் இரு தரத்திலும் ஒரே நடைமுறைகளையே பின்பற்றி வருகின்றனர். தாலி கட்டுதல், கால் கழுவுதல், மாப்பிள்ளை கூட்டுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற பழம்பெரும் நடவடிக்கைகள் இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றது. வயல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் களவெட்டி, ஒமல், உப்பெட்டி, அவணம் போன்றன பொதுவாக பயன்படுத்தப்பட்ட சொற்களாகும். வீடுகளைப் பொறுத்தவரையில் விறாந்தை, உள் வீடு, ஆல வீடு, திண்ணை போன்றன இரண்டு பகுதியினராலும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை பார்க்கும் போது வேடர்காலத்திலேயே அராபியர்கள் இப்பிரதேசத்தில் வந்துபோயுள்ளதை அவதானிக்க முடிகின்றது மேலும் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் முக்குவர்கள் யாழ்பாணத்திலிருந்து மட்டக்களப்பு பிரதேசத்திற்கு குடியேறியுள்ளார்கள் என்று தெளிவாகத் தெரிகின்றது. எனவே ஆரம்பகாலத்திலிருந்தே தமிழர்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர் என்று புலப்படுகின்றது.

ஏற்கனவே கூறியது போன்று தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் இருந்த திருமண உறவு காரணமாகவும் ஏனைய கலாசார தொடர்புகள் காரணமாகவும் "குடிமரபு" தமிழ் மக்களிடமிருந்து முஸ்லீம்கள் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. இக்குடி முறையானது பள்ளிவாசல்களில் நிர்வாகிகளைத் தெரிவு (மரைக்கார்) செய்வதிலும், கல்யாணப் பதிவுகளின் போதும் கவனிக்கப்படுகின்றது. இது சமூக ரீதியான அம்சமாகவே கவனத்தில் கொள்ளப்படுகின்றது. கிழக்கிலங்கைத்தமிழர்கள் முக்குவர் சட்டத்தினால் ஆளப்படும்போது யாழ்பாணத்தமிழர்கள் தேசவழமைச்சட்டத்தினால் ஆளப்பட்டனர் அதேவேளை முஸ்லீம்கள் முஸ்லீம் சட்டத்தினால் ஆளப்பட்டு வருகின்றனர். இருந்த போதிலும் இரு சமூகங்களுக்கிடையில் இருந்த கலை, கலாசார உறவுகள் பின்னிப்பிணைந்திருப்பதனால் குடி முறையானது இன்று வரை நிலைத்து நிற்கிறது.

பொதுவாக கிழக்கு மாகாணத்தின் கடந்த கால வரலாறுகளைப் பார்க்கும் போது தமிழ் முஸ்லீம் மக்கள் நகமும் சதையும் போல வாழ்ந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது. இதற்கு சான்றாக முன்னோர்கள் கூறிய கதைகள் இன்னும் நிலைத்து நிற்கின்றன. அதே போன்று குடிப்பரம்பலை பார்க்கும் போது தென்கிழக்கில் முஸ்லீம்கள் செறிந்து வாழ்கின்ற அதேவேளை கிழக்கின் வடபகுதியில் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது ஒரு ஊருக்கு அருகில் இன்னுமொரு ஊர் என்ற அடிப்படையில் தமிழர்களும் முஸ்லீம்களும் "பிட்டும் தேங்காய்ப் பூவும் போல கலந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## உதவியவைகள்:


1. மட்டக்களப்பு மான்மியம் - வித்துவான் F.X.C நடராசா
2. ஏறாவூர் வரலாறு (2005) - ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்
3. மருதமுனையின் வரலாறு - புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
4. அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் - கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு.



**எம்.எம். நௌபல்**

பிரதேச செயலாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கையான கோலம் வேண்டும்

கண்ணியமாய் சேலையில் காட்சி தந்து
புண்ணியங்கள் செய்து வாழ்ந்த பெண் குலத்தார்
காசினில் பேறடைந்து முதன்மை கொண்டார்
தூசி தட்டி மனங்களிலே பிரமை கண்டார்
கிலேசங்கள் இல்லாத வாழ்வமைத்து
உலா வந்து சொன்னவைகள் நித்திலந்தான்.
கீர்த்தனையால் இறையச்சம் இதயத்துள்ளே
கீர்த்தியுடன் இலங்குவதால் பரவசம்தான்.

குந்தகங்கள் செய்து வாழத் தெரியா மனதை
சிந்தனையால் அரங்கேற்றி மகிழ்வே கொண்டார்.
கூக்குரலும் கொந்தளிப்பும் வெறியாட்டங்கள்
தீக்கிரைதான்! சாக்கடையும் இல்லா தொழியும்
கெடுதிகளின் பிரசவங்கள் மாண்டு போகும்.
விடுதலையால் வையகத்தில் பேரின்பம் தான்.
கேண்மையினால் நல்லறங்கள் வலிமை கொள்ளும்!

கைகலப்பு வக்கிரங்கள் பலமிழந்து
வைகறையில் இறைவனுக்குச் செவி சாய்க்கும்.
கொழுந்து விட்டு எரிகின்ற கோபமும் தான்
அழிந்துவிடும் ! வீழ்ச்சி கண்டு வாஞ்சை மேவும் !
கோணலான வாழ்வுதனை நிமிரச் செய்யும்
கோபுரங்கள் ஆதரவும் வந்து சேரும்.
கௌரவமாய் வாழ்வதுதான் நோக்கமானால்
கௌரவமாய் உடையணிந்து வாராய் ! பெண்ணே !

இந்து மகள் தங்கம்மா அப்பாக்குட்டி
சிந்தனையால் சீரடைந்த சாரதா தேவி
பேரின்ப சாகரத்தில் பெருமை கண்ட
காரிகையாம் சரோஜினியையும் மனதிலேந்தி
சங்கையான கோலமுடன் உடையணிந்து
பங்கமில்லா வாழ்வோடு சங்கமித்து
காமத்தீ, வன்புணர்வைத் தூண்டிலாக்கும்
தீமைகளைத் தூக்கி எறி ! சேமம் காண்பாய்.

**அ.மு.பாறூக்**
புன்னகை வேந்தன்

## முகில் வியாபாரி

பறந்த போதே தெரிந்தது
பஞ்சு மிட்டாயாக முகில்கள்
பூமி சமைந்ததிலிருந்து
நிலா தன் தாவணியாய்
மேகத்தையே அணிந்திருந்தாள்.

தாமதமாகிவிட்ட சூரியன்
இறந்து விட்டதாகவும்
தாம் மூடியிருப்பது
அவன் முகத்தையென்றும்
கூறின மேகங்கள்.

கடல் சலித்து மூளியாக
விட்ட மூச்சின் பெருவாடை
புயலாகி வீசி
உரிந்தன முகில்களை.

கண்ணாடிக் கிண்ணம் போல்
கவிழ்த்து வைக்கப்பட்ட வானம்
புரிந்து
முதல் கல்லை
மேகம் மேல் எறிந்தது.

பிஞ்சு நட்சத்திரங்கள்
நடனமிடும் மேடையெல்லாம்
தெளியாத ஒளியை
வீசியது பூமி.

விக்கித்துப் போன ஓவியன்
அமர்ந்திருக்கிறான்
ஒரு குருவியின்
கொண்டைப் பூ மேலே.

இன்றைய நாளிதழை
யார் அச்சடித்தார்

முகிலை குத்தகை பேசிய
அந்த வியாபாரியா?

**யூ. எம். நபீல்**
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராத்திரியின் ரகசியங்கள்

என் எண்ண ஓட்டங்கள்
எங்கோ இடறிக்குதித்தது.
இன்றைய இராப்பொழுதில்
ஊரே உறங்கிவிட
நான் மட்டும் விழித்திருந்தேன்.

மனசு மட்டும்
எதிலும் ஓடவில்லை
நள்ளிரவுப் பொழுதினில்
என் தலையணை மட்டும்
கண்ணீரில் நனைந்தது
கனத்த இதயத்தோடு !

ஒவ்வோர் ராத்திரியும்
ஓராயிரம் கதைகள் சுமந்தபடி
ஒய்யாரமாய் நகருது
ஓசையில்லா ராத்திரிகள்.

அழுத்திப் பிடிக்கும்
இறந்தகால வலிகளுக்குள்
அமரத் துடிக்கும்
நிகழ்கால நிஜங்களுக்குள்
இரையாகப் போகும்
எதிர்கால போராட்டங்களுக்காய்
இன்று இரைந்து கொண்டிருந்தது
எனது வறுமைச் சாசனங்களில்
என் வாழ்வின் வசந்தகால
வர்ணக்கீறல்கள்.

வலி(மு)யும் வாழ்வில் பு(தெ)ரியாமல்
வயலுக்கு வந்து நிற்கும்
வாலைக்குமரி மகள்
வாயில்லாப் பூச்சியாய்
என்னை ஏறெடுத்துப்பார்த்து
மௌன மொழியில் கேட்கிறாள்
என் மண(ன) வாழ்வு ;
எப்போ!......... எங்கேயென்று.
வலித்துப் போகும் என்னிதயமதில்
வந்தமருது மௌனமாய்
ஒரு மரண யுத்தம்
பணத்திற்கும் பதிலுக்கும்
நான் எங்கே போவேன்?

ஓட்டுமில்லை உறவுமில்லை
உதவிக்கரம் கொடுக்க
சு(உ)ற்றத்தில் யாருமில்லை
அன்றாட வாழ்க்கைக்காய்
அயராது தறிக்கட்டையில்
ஏறிக்குந்தி அடிக்கிறேன்
சாறன்கள் சில — அதில்
எகிறிக் குதிக்கும் பணம்
என் அன்றாட வாழ்க்கைக்கே
போதவில்லை - இதில்
எங்கே விடியப் போகிறது
எங்களின் ஏழ்மைத்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்க்கைக்கே
அல்லோல கல்லோலப்படும்
விதவைப் பெண் நான்
விடியல் தேடும் என் மகளுக்கு
நல்வாழ்வைத் தேடிக்
கொடுப்பது எப்போது?

பணம்..... பணம்..... பணம்........
தேடிக் களைத்து
அலுத்து விட்டதெனக்கு !
அன்பான மானிடா !
அல்லும் பகலும் என் விழிகள்
அயராது உதிர்க்கிறது
கண்ணீர்மழை......
கரைசேர முடியா ஓடமாய்
என் கன்னி மகள்
மண(ன) வாழ்க்கைக்காய்
காத்திருப்பது கண்டு.

வாழ்வுக்கும் சாவுக்கும் மத்தியில்
நானும் தவித்துக் கொண்டிருக்கிறேன்
முதிர் கன்னியாய் எனதான மகளின்
முழு இளமைத் தொலைப்புக்களின்
அதீத கொதிப்பின் வெறுப்பில்

மானிடா!
என் முயற்சியின் முடிவிடங்கள்
எல்லாம் என் இயலாமையின்
எதிரொலிகளாக என் வாழ்வை
ஏறி மிதிப்பது கண்டு தினம்
ஏமாந்து போகிறது என் ஆத்மா
சமூகமே!
இறைவனின் ஜாதகத்தில்
ஏற்ற, இறக்கங்கள் கூடிக்குறைய
என்போல் விதவைகள் வாழ்வினில்
ஏமாந்து தவிப்பது மட்டும் நியாயமா?

உங்களின் கருணைக்கண் பார்வையில்
எங்களின் வாழ்விற்கோர்
விடியல் தாருங்களேன்
மானசீகமாய் என் மனச்சாட்சி
புலம்ப.......
நீண்ட பெருமூச்சில்
நின்று போனது எனதான
நிஜங்களின் வ(நெ)ருடல்கள்......
இரவுகள் மட்டும்
நீண்டு கொண்டே விரிகிறது
கோடிச் சுமைகளை சுமந்தபடி...!

**மாஹிறா முஜீப்,**
மருதமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா உனக்காக...



என் பேனாவும் எனை
அடிக்கடி நொந்து
கொள்கிறது
காலையிலும், மாலையிலும்
"சைன்" ஒன்றேதான்
உன் வேலையா என்று !

பல்கலைக்கழகத்தில்
படாத பாடுபட்டு
பட்டமொன்றைப் பெற்றேன்
அம்மாவின் இடியப்ப
உரலுக்கு இனியாவது
ஆறுதல் கிடைக்கட்டும்
என்று !

வார்த்தைகளில் வர்ணிக்க முடியா
காதலும், கனவுகளும்
என்னுள் மூழ்கி அடித்த போதெல்லாம்
அமைதியாயிருந்தேன்.
தொழிலொன்று
கிடைக்கும் என்று !

நான்கெட்டையும் தாண்டிய
வயதுடன் பத்தாயிரம்
சம்பளத்துடன் பட்டதாரி(ப்)
பயிலுனராக வருடம்
தாண்டியும் வாழ்கை(ப்)
பயணத்தில்
சோடியைச் சேர்க்க
முடியாமல் வானத்தை பார்த்து
பெருமூச்சு விடுகிறேன்
பெரும் கூட்டமாக !

பத்தாயிரத்தில் சிலரை
வாழ வைக்கிறோம்
என்ற ஓர் திருப்திக்காய் !

அம்மாவின் ஆறுதலுக்காய்
அரச உத்தியோகம்
தேவை என்றோர்
அம்மாவின் வாக்கிற்காய்
இன்றும் ஓர் பேனாவுடன்
இன்னுமொரு காலை
வேளைக்கான
"சைனு" க்காக புறப்படுகின்றேன்
அம்மா எல்லாம்
உனக்காகத்தான் !

**றிஸ்வானா எம். இர்ஷாட்**
கல்முனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரத்திற்கு உயிரூட்டுவோம்!

கூட்டங்கூட்டமாய் மகிழ்வோடு
கூடிவாழ்ந்த ஆதிகால மக்கள்தம்
செய்திப்பரிமாற்ற ஊடகமாய்ப் பல
சேதிகளைக் கூறியது "புகை"
மாறுபட்ட தகவலுக்காய் நிதம்
மேலெழும் பலவகை நிறம்
மரணத்தை அறிவிக்கும் எழுத்துவிரிப்பு
அரசாணையை பறைசாற்றும் பலகை.

நடுக்காட்டு பீதி வாழ்வுதனை
நதிக்கரை ஈர்த்தது புகலிடாமாய்
நடுவிலும் மார்பிலும் ஆடிய இலை
நாளாகநாளாக மிருகத்தோலாயின.
நம்முன்னோர் பாங்கும், தோரணையும்
நடைமுறைப் பழக்கவழக்கமும்,
நரைவிழ ஆரம்பமாயின.

மருதத்தின்பால் விருப்பு முளைவிட
மாற்றங்கள் பரந்து வியாபித்தன.
மிருகச் சவாரிகள் முடங்கின.
கட்டுமரம் நீராவிக்கப்பலானது !
அரிதாக உதவியது புகைவண்டி
ஒலியின் எதிரொலித் தாக்கம்
வானொலியாய்ப் பரிணாமம் பெற்றது
பறவைச் சிறகின் சூட்சுமம்
விமானம் பறக்க வித்திட்டது.
விஞ்ஞான விருத்தி வேர்விட்டது !

அன்று...
பருத்தியும் செம்மறியும் இழையைத்தர
சீலை துணியாகவும் மாறிற்று
மானத்தையும் நிறைவாகக் காத்தது.

இன்று...
துகள்திரண்ட வர்ண உடலோவியமும்,
துகில்துண்டும் மெய்யை மறைக்க
துயில்கின்றன மேனியில் நாகரீகமாய்.
சத்தியாக்கிரகத்தின் நவீன மகுடம்
நிர்வாணமாய் பயணிக்கும் மனிதர்கள்.

நாளை...
காயத்தை மூடிக்காத்த இலை
காய்ந்து சருகாகி உதிரும்
நாணிடும்,
நடுக்காடும் நைல்நதியும்.

பகையை அடியொட்டிய ஊடகம்
பகைவரைத் தாக்க உதவுவதும்
புதிய போர்தொழில்நுட்பம் வரை நீண்டன
மிருகக் கொலைக்கான கல்லாயுதம்
வனப்பை குலைக்கும் அணுவாயுதமானது.

விழுமியங்களைக் கொல்லும் நாகரீகம்
வீழ்ச்சி காணும் உலக சமாதானம்
மரபு நெறிதவறிச் செல்ல செல்ல
கலாசாரம் மெல்ல மெல்ல சாகின்றது
நாடு மதம் நிறம் மொழியறுத்து
பேதங்களை மெய்யாகவே துறந்து
உயிரூட்ட சமமாய் ஒன்றிணைவோம்
கலாசாரத்தை கடைசிவரை காப்போம்!

**ஏ.எச்.ஏ. ழாஹிர்,**
நிர்வாக கிராம உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாவட்டக் கச்சேரியும் புலவனால் பாடப்பட்ட அதன் உதவி அரசாங்க அதிபரின் சேவைகளும்

ஆதிகாலத்தில் நிலமனைத்தும் போடிமா ரென்றழைக்கப்பட்ட நிலச்சுவாந்தர்களிட மிருந்தன. ஏனைய மக்கள் உழவர்களாகவும் ஏனைய தொழும்புகள் செய்பவர்களாகவும் மிருந்தனர். போடிகள் முதலிட உழவர்கள் நலத்தில் உழைக்க, விளைந்து வந்தலொருபகுதி உழவர்களுக்கு மேனையவர்க்கும் கொடுக்கப்பட்டது போக மீதி போடிக்குப் போனது.

ஒல்லாந்தர் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியை ஆட்சி செய்த போது போடி முறையை மாற்றி நெல்விளைச்சலைப் பொருத்தி தமது வருமானத்தைப் பெருக்க முயன்றனர். போடிகளிட மிருந்த காணிகளை உழவர்கள், வண்டிக்காரர்களுக்கு பகிர்ந்தளித்தனர். நீப்பாசனத் திட்டங்களை அமுல் நடத்தினர். நிலத் தோம்புகளை நியமித்து காணிகள், பிரயோசனம் கொடுத்த தென்னை, மா போன்ற மரங்களை தெரிவு செய்து வரி அறவிட்டனர். இந்த விவசாயப்புரட்சியை முன்னின்று நடத்துபவராக டச்சு ஏந்தரி ஜேக்கப் பர்நாந்து என்பவ ரிருந்தார். பர்நாந்து கிட்டு என்று அழைக்கப்படும் இந்த எந்திரியின் பெயர் கொண்டே இன்றும் அழைக்கப் படுகிறது.

இன்னுமொரு பசுமைப்புரட்சி மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த வேள்சித்துரை (J. W. Birch) என்பவரால் 1861 ம் ஆண்டளவில் நடத்தப்பட்டது. இவர் பல குளங்களைப் புனருத்தானம் செய்ததோடு காடாய் கிடந்த நிலங்களை கட்டாயமாக மக்கள் மீது திணித்தார். ஏக்கருக்கு ரூபா ஐம்பது செலுத்தும் படி கூறிய இவர், மொத்தமாக செலுத்த முடியாதவர்கள் வைதாவாக செலுத்தும் படி கூறி கரவாகுவில் நடந்த காணிக் கச்சேரியின் போது செல்லமாக காணி கொள்ளத் தயங்கியவர்களை வாயில் புகைத்துக் கொண்டிருந்த சுருட்டால் சுட்டதாகவும் கதை உண்டு. பண்டித் தீவுக கண்டத்துக்குள் அப்பம் சுட்டு விற்றுக் கொண்டிருந்த அவ்வாள் என்ற பெண்ணிடம் சென்று அப்பம் சாப்பிட்ட இவர் அவளுக்கு காணி கொடுத்தார். அக்கண்டம் அவ்வாளைக் கண்டம் என அழைக்கப் படலாயிற்று. அவ்வாளை நடுப்பத்து என்றும் மூத்திரக் கண்டமென்றும் பீக்கண்ட மென்றும் அழைக்கப் படுவதாக மூத்தோர் கூறுகின்றனர். அவ்வாள் என்ற இப்பெண் சம்மாந்துறையைச் சேர்ந்தவரென்று கல்முனைக்குடி பிச்சுப் பிலாவடி ரோட்டில் வசிப்பவரும் பணத்தீவுக் கண்டத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக வேளாண்மை செய்து கொண்டும் தேத்தண்ணிக் கடை வைத்து வியாபாரம் செய்து செய்து கொண்டும் இருந்தவருமான சிரேஸ்ட பிரஜை, அகமது லெவ்வை முகம்மது யூசுப்பு (குஞ்சித்தம்பியார்) கூறினார்.

இன்னுமொரு பசுமைப்புரட்சி மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த பிறையின் துரையின் காலத்தில் பொத்திவில் பாணாமைப் பிரதேசத்தில் நடைபெற்றது. இப்புரட்சி 1920 களில் பாணாமைப்பற்று வன்னிமையாக இருந்த எம்.எஸ் காரியப்பரினால் செய்யப்பட்டது. பெருந்தொகையான காணிகள் வைத்திருந்தவர்களுடைய காணிகளைச் சுவீகரித்து பிறையின் துரையின் அனுமதியுடன் அரச காணிகளையும் சிங்கள தமிழ் முஸ்லிம் காணிகளற்றவர்களுக்கு பங்கிட்டுக்கொடுத்து நெல் உற்பத்தியை அதிகரித்தார். இப்படியாக பகிர்ந்தளிக்கப்பட்ட கண்டங்களிலொன்று இன்றும் பிறையின் துரைக்கண்டமென்று அழைக்கப்படுகிறது. இது நடந்து இரண்டு தசாப்தங்களின் பின் கல்முனைக்கச்சேரியில் உதவி அரசாங்க அதிபராக இருந்த புலவனொருவனால் பாடப்பட்ட (கலாநிதி) ஏ.எம்.ஏ அஸீஸ் அவர்களால் அதன்கிழக்கிலங்கையில் அதுவரை நடந்தவை அனைத்தையும் விடச்சிறப்பாக நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது உலகமகா போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. போர் நடவடிக்கைகளைத் தவிர ஏனைய நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இறக்குமதித செய்யப்பட்டு வந்த அரிசி மற்றும் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை இலங்கையில் உருவானது. இதனைக்கண்ட பிரித்தானிய தேசாபதிபதியும் இராசாங்க சபையில் உணவு விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ் சேனநாயக்காவும் உணவு உற்பத்தியைப் பெருக்கத் தீர்மானித்து இலங்கையைப் பல உதவி அரசாங்க பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு அரசாங்க அதிபரை நியமித்தார்.

கல்முனைப் பிரதேச உதவி அரசாங்க பிரிவுக்கு, உதவி அரசாங்க அதிபராக சுங்கத்திணைக்களத்தில் உதவிச்சுங்க அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்த, இலங்கை முஸலிம்களில் முதல் சிவில் சேவை அதிகாரியாக திகழ்ந்திருந்த ஏ. எம். ஏ அஸீஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார். கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கரவாகு – நிந்தவூர் பற்று, சம்மாந்துறைப் பற்று அக்கரை பற்று, பாணம பற்று, வேகம் பற்று ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. முதலியார் எம். எஸ். காரியப்பர், முதலியார் கே. ஏம், அப்துல் மஜீத், முதலியார் டபிள்யு. எச். கனகரெட்னம், முதலியார் ஏ. சின்னலெவ்வை, முதலியார் எம். ரி. மதுராவ ஆகியவர்கள் முறையே இப்ந்துகளுக்கு வன்னிமைகளாக கடமை செய்தனர். முதலியார் எம். எம். இப்றஹீம் இவ்வைவரின் மீதே சங்கங்களுக்கும் பொதுவான நீர்ப்பாய்ச்சல் சுப்பிறிந்தராக கடமையாற்றினார்.

கல்முனை உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்கள் கல்முனை வந்ததும் கல்முனை (ஆதார) வைத்திய சாலையை அண்மித்து பிரதான வீதியில் அமைந்திருந்த வீட்டில் குடியேறியவராக கல்முனை சவக்காலை வீதியில் இமாம் மாவத்தை எனும் வளவில் கட்டிடத்தில் கல்முனை கச்சேரியை அமைத்துக் கொண்டவராய் அதிக உணவு உற்பத்தி முயற்சியை தொடங்கி வைத்தார். மேற் சொல்லப்பட்ட வன்னிமைகளையும் நீர்ப்பாய்ச்சல் சுப்ரீன்டரையும் ஏனைய அதிகாரிகளையும் கொண்ட சபை ஒன்றை அமைத்து அதன் செயலாளராக கரவாகு – நிந்தவூர் பற்று வன்னிமை முதலியார் எம். எஸ். காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார். இச்சபை உடனுக்குடன் கூடி அதிக உணவு உற்பத்தித் திட்டதின் கீழ் 10000 ஏக்கர் நிலத்தை கொண்டு வருவது என தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலங்களை பயிர்ச் செய்கைகளின் கீழ் கொண்டு வர தூர்ந்த நிலையில் இருந்த குளங்கள், வாய்க்கால்கள், கட்டுகள், அனைக்கட்டுகள் முதலியன புனருத்தானம் செய்யப்பட்டன. நிலமற்றிருந்தவர்களுக்கு ஒருவருக்கு இரண்டரை ஏக்கர் மேட்டு பள்ள நிலமும், ஏக்கருக்கு ரூபா 20 பணமும் இரண்டரைப்புதை, மாவடிப்பள்ளி, திருக்கோவில் முதலிய இடங்களில் கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்டன. விவசாயிகள் பயிற்சிகள் கொடுக்கப்பட்டனர். 475 ஏக்கர் காணியில் செங்கறபடையில் மாதிரிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டது. நெல்லோடு கரும்பு, வாழை, சேழம், குரக்கன், கரும்புஇ மற்றும் மரக்கறி வகைகள், நிலக்கடலை, மரவள்ளிக் கிழங்கு முதலியவை பயிரிடப்பட்டு அதிக விளைச்சல் காயப்பட்டது.

இவ்விவசாயப் பண்ணையின் அறுவடையை விவசாய அமைச்சர் டி. எஸ். சேனநாயக்க அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அமைச்சர் அவர்களை விசேடமாக அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் இருக்கவைத்து உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்கள் பக்கத்தே அமர மேற்குறிப்பிட்ட வனிமைகள், நீப்பாசன சுப்ரீன்டர் ஏனைய அரசாங்க அதிகாரிகள், வட்டை விதானைமார், விவசாயப் போடிமார், உழவாளிகள் முதலியோர் நீண்ட வரிசையாக செங்கற்படை வரை நின்று அழைத்துச் சென்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது என்று எனது தகப்பனார் மானாகம் கண்டத்து வட்டை விதானையாக இருந்த மீ. வ. வி. முகைதீன் பாவா போடி ஹாஜியார் கூறக் கேட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விவசாயப் புரட்சியின் வெற்றியை வெளிக் கொணர 1942.03.27ந் திகதி முதல் ஏப்ரல் திங்கள் 2ந் திகதி வரை விவசாய விழாவும் கண்காட்சியும் கல்முனை முறற் வெளியில் (பழைய நகர மண்டபமும் கல்முனை மாநகர சபைக் காரியாலயம் இருக்குமிடம்.) நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளுக்கு உதவி மாகாண அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பாக நடாத்தினார். இவற்றை உணவு விவசாய அமைச்சராக இருந்த டொன் ஸ்ரீபன் சேனநாயக்கா திறந்து வைத்துப் பேசுகையில் பொது மக்களுக்கு காணி வழங்கி உணவு உற்பத்தியில் வெற்றி கண்ட இளம் உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்களை வெகுவாக பாராட்டியதோடு அமைப்பு சபை செயலாளராக இருந்த கரவாகு – நிந்தவூர் பற்று வன்னிமை முதலியார் எம். எஸ். காரியப்பர் அவர்களையும் ஏனைய வன்னிமைகளையும் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்களை, அவர் செய்து வெற்றி கண்ட பசுமைப் புரட்சிக்காகவும், மக்களுக்கு அவர் கொடுத்த காணிகளுக்காகவும் மக்களுட னவர் நெருங்கிப் பழகியமைக்காகவும், முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி நலனில் அவர் அக்கறை காட்டியமைக்காகவும் பொதுமக்கள்வரை "அஸீஸ் தொரை" எனச்செல்லமாக அழைத்து அவர் கொடுத்த நெற்காணி கண்டமொன்றை அவர் சேவை நீடித்து வாழ அஸீஸ் தொரை கண்டமென்றழைத்தனர். அப்பெயர் இன்று வரையும் நீடித்திருக்கிறது. அவர் பொதுமக்களுக்கு 10000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை இனப்பாகுபாடின்றி பின்வருமாறு பகிர்ந்தளித்தார்.

கரவாகர் பள்ளவெளிக்கண்டம், சம்மாந்துறையார் பளவெளிக் கண்டம், மேசன் துரைக்கண்டம், அஸீஸ் துரை கண்டம், விண்ணாங்கடிப்பாம், வெட்டுக்காடு, 'யாத்து நபி புரம், சாவாத்துக் கண்டம், பண்டித்தீவு நாணல் பத்துக்கண்டம் தவிபோட்டாற்று கண்டம், கனங்காட்டான் வட்டை, மையார் கிணத்தை, அளிக்கம்பை, இழுக்குச் சேனை, நீத்துச்சேனை, நீத்துச்சேலை, பொத்தான் வெளி, உசர வெளி, ஆனை விழுந்தான், மொட்டடை யண்ட வெளி, பூரான் புரி, கயற்றை யடி, பள்ள வெளி முதலிய நெல்வயல்கள் கொண்ட கண்டங்கள் அஸீஸ் துரை அவர்களால் கரவாகு பற்று நிநதவூர், சம்மாந்துறை, இறக்காமம், காரை தீவு, அக்கரைப்பற்று, கோளாவில், பனங்காடு, திருக்கோவில் முதலிய கிராம காணிகளற்ற மக்களுக்கு வழங்கப்பட்டன.

கல்முனையிலிருந்து மேற்சொல்லப்பட்ட பசுமைப் புரட்சியை அஸீஸ் துரை அவர்கள் செய்து கொண்டிருந்த அதேவேளை வேறு பல சுட்டிக்காட்ட கூடிய கைங்கரியங்களையும் செய்தார். அவற்றிலொன்றுக்காக புலவனொருவனால் மெச்சிப் பாடப்பட்டவராகவும் திகழந்தார்.

கல்முனை பிரதேச முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கியவர்களாக இருப்பதைக் கண்டு மனம் நொந்த மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் துரை அவர்கள், அவர்கள் அப்படி பின்தங்கி இருப்பதற்கு பண வசதியின்மையே காரணம் எனக் கண்டு அதற்கான பரிகாரம் காணவும் முற்பட்டார். பல பிரமுகர்களை கலந்தாலோசித்த பின் கல்முனை(குடி) காசீம் ரோட்டிலிருந்த ஏ.எம். சரீப் விதானையின் வீட்டில் பிரமுகர்களைக் கொண்ட கூட்டம் ஒன்றைக் கூட்டி கலந்தாலோசித்து முஸ்லிம் மாணவர்களுக்கு உதவும் பொருட்டு கல்விச் சகாய நிதியம் ஒன்றை அமைக்கத்தீர்மானித்தார். அதற்கு கூட்டத்துக்கு சமூகம் கொடுத்தவர்களும் ஏனையோரும் பங்களிப்புச் செய்ய முன் வந்து பெருந்தொகை பணம் மாதா மாதம் செலுத்தினர். அஸீஸ் துரை அவர்கள் மாற்றலாகி கண்டி சென்று பின் சேவையிலிருந்து ஓய்வு பெற்று கொழும்பு மரதான சாஹிரா கல்லூரியின் அதிபராகி கல்வி சேவையாற்றி ஓய்வு பெற்று மௌத்தாகும் வரைக்கும் இந்த கல்விச் சகாய நிதியம் முஸ்லிம் ஸ்கொலசிப் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருடன் இயங்கி தேசிய மட்டத்தில் அநேக முஸ்லிம் வறிய மாணவர்களுக்கு உதவி செய்து வந்தது. அவரின் காலத்தின் பின்பும் அந்நிதியம் சிறப்பாக அவரின் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அஸீஸ் துரை அவர்கள் கருணையும் காருண்யமும் உடையவராக இருந்தார். யுத்தகாலத்தில் அவசர காலச்சட்டம் அமுலில் இருந்தது. நெல் அரிசி போன்ற பொருட்களை ஓரிடத்திலிருந்த இன்னோரிடத்துக்கு கொண்டு செல்ல அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரம் தேவைப்பட்டது. ஒரு விதி விலக்கு இருந்தது. ஒருவர் கால் புசல் அரிசி கொண்டு செல்லலாம் என்பதாம். இவ்விதி விலக்கை அறிந்த மட்டக்களப்பு புனிதமரியாள் விடுதி ஆசிரியர் கல்முனை சந்தைக்கு இருபத்தைந்து மாணவர்களுடன் வந்து ஆறைய கால் புசல் அரிசி வாங்கி 15 சாக்குகளில் கட்டி கரத்தை ஒன்றில் ஏற்றியவராய்படகில் ஏந்திச் செல்ல கிட்டங்கித் துறையை நோக்கிச் சென்றார். அனுமதிப்பத்திரமில்லாமல் பெருந்தொகையான அரிசியைக் கொண்டு செல்வதைக் கண்ட அவ்வூர் தலைமைக்காரன் அரிசியை மறியல் செய்து அன்று விடுமுறை நாளாக இருந்த படியினால் நீதிமன்றம் செல்லாமல் தன் வீட்டுக்கு கொண்டு சென்றான்.

திகைத்து நின்ற விடுதி ஆசிரியரும் மாணவர்களும் சமயோசிதம் ஒன்று தோன்றவே, உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் துரை அவர்களின் வதிவிடம் சென்று அவரைக் கண்டு உண்மையைச் சொல்லி முறையிட்டனர். மனம் நெகிழ்ந்த உதவி அரசாங்க அதிபர் அரிசியை மட்டக்களப்பு சென்மேரீஸ் விடுதி வரை கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் எழுதி தலைமைக்காரனிடம் கொடுத்து அரிசியுடன் கிட்டங்கித்துறை வரை சென்று படகில் ஏற்றிவிட்டு வரும்படி பணித்தார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை அவர்கள் உதவி அரசாங்க அதிபர் ஏ. எம். ஏ அஸீஸ் துரை அவர்கள் பற்றி இவ்வாறு பாடினார்.

இருதயத்தின் ஈரிதழ் போல் இந்து முஸ்லிம் யாம்
ஒரு வயிற்றுப் பாலகர் போலுள்ளோம்
புலத் துயர்ந்து வண்மைப்புகழ்க் கதிர் இள்வீசி
நிலத்தி கா ரஞ் செய்து நின்று – பலத்தினிறை
நல்ல களம் பொலிந்து நாடு புத்தலால்
நெல்லும் அஸீஸ் துரைக்கு நேர்.

முற்றும்

**கலாபூஷணம் எம். எம். காசீம் ஜி**
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களன்பின் பிரதேச செயலாளர் !!

அன்புடனே ஆதரித்து
பண்புடனே பணி செய்யும்.
"வன்முறைகள் ஏதுமின்றி"
வளமான சேவையாற்றும்,
உன்னத மிகுந்த மானிடராம்.
உவகை நிறைந்த பொற்குடமாம்.
"கண் இமையைக் காப்பது போல"
கடமை தனில "செயல் வீரர்"

எப்போதும் இரக்கம் காட்டி ...................."
எளியவர்களுக்காய் கரம் நீட்டி................"
துப்பரவாய் வாழ்வுக்கு உரமூட்டி............."
தூய நற் செயலாற்றும் வழிகாட்டி............"

கள்ளங் கபடம் இல்லாது,
கருணை முகத்துடனே நல்லாய்,
உள்ளம் திறந்து
உதவும் பாங்கு வில்லாய்,

ஏழைகளின் ஒளி விளக்கிடுவார்
ஏணியாய் நின்று தோல் கொடுத்திடுவார்!
கோழைகளின் போக்குகளை ஒழித்திடுவார்
கோப மின்றி அரவணைத்து புன்னகைத்திடுவார்!
வாழ வசதியில்லாதோருக்கு வாரி வழங்கிடுவார்
வஞ்சகமாக பேசுவோரை திருத்திடுவார்!
சாலைகளை சோலைவனமாக்க நினைத்திடுவார்
சாபமான நடவடிக்கைதனை எதிர்த்திடுவார்!

அஞ்சாத சிங்கமாய் துணிந்திடுவார்
ஆறுதலாய் நற்போதனை உரைத்திடுவார்!!
பஞ்சு போல மென்மையாய் இருந்திடுவார்!!
பக்குவமாய் வேலைகளை செய்திடுவார்!!
கெஞ்சி எதையும் கேட்டகமாட்டார்
கெட்டித் தனமாய் காரியத்தை செயலாற்றுவார்!!
நெஞ்சு வெடிக்க எவரையும் ஏசமாட்டார்
நேர்மையுடனே எல்லாவற்றையும் செய்து
முடிப்பார்!!

இன மதம் பார்க்க மாட்டடார்
இயலாதவரை ஓரமாய் ஒதுக்க மாட்டார்!
பணத்துக்காய் ஊழல் செய்யமாட்டார்
பதவிக்காய் அநீதி இழைக்கமாட்டார்!
ஒற்றுமைக்காய் ஓடியாடி தினம்
உழைப்பார்
ஒவ்வொரு விடயத்திலும் கண்ணும்
கருத்துமாயிருப்பார்!
வேற்றுமையை வெறுத்துக் களைந்
தெறிவார் - பிற
வேத மக்களையும் கண்ணியமாய் நன்கு
மதிப்பார்!

கல்முனை மாநகர மண்வளம்.
கால மெலாம் சாதனை படைக்க நிதம்
பல்வேறு துறையில் ஒளி வீசிடவே......!
பணிபுரியும் மருதமுனைத் தாயின்
"நிலாமகன்"
"எம். எம் நௌபல் சேர் அவர்கள்"
எம்(பிர)தேசத்தில் நீடுழி
வாழ்கவே.........!
இதயம் கனிந்து கவிப்பாகு பொழிந்து
இதமாக வாழ்த்துகிறோம்!!

இறைவா இறுதியாக நாம் கேட்கிறோம்.
நிறைவாக குறைவின்றிக்
குதூகலமாய்...............
எல்லாம் நிறைந்த
செல்வமாய்................
வாழ வேண்டும் வாஞ்சையுடன்
ஈருலகிலும்.
எங்களன்பின் பிரதேச செயலாளர்.

நன்றி

**கவிஞர் எம். ஏ. சி. ஸாஹிர் கரீம்,**
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது கற்பு...

உற்றான் பணிந்தவளும்
உற்றிடம் களைந்தவளாய்
அகமகிழ்ந்தும்
பரவசமதிலும் புபதுமையும்
மகத்துவமிகு மங்கையுமாய்
இருப்பதுவே – கற்பு.

பள்ளியறை பவ்வியமும்
பயிர்ப்பினை பகிஷ்கரிப்பும்
அநுதின மகமறிந்தும்
புரவலனை பூவையரும்
பூஜிப்பதுவும் - கற்பு.

கதிரவனின் விடியலினில்
கணவனது முகம் பார்த்து
கனிவுடனே கலக்கமின்றி
கச்சிதமாய் கடமைகளை
கடைப்பிடிப்பதுவும் - கற்பு.

துணைவியின் துணையாக
துன்பத்தில் பங்காக
இன்பத்தில் இணையாக
பலதையும் பகிர்ந்தளித்து
இல்லறத்தில் இணைவதுவும் - கற்பு.
மங்கையின் மன்னவனாக
காரிகையின் கதிரவனாக
கலந்திட்ட கொழுந்தனின்
கலக்கத்தினை களைந்தவனாய்
கருணையுடன் இருப்பதுவும் - கற்பு.

மனைவியின் மனமறிந்து
குறைநிறை கூடறிந்து
குற்றங்கள் கேட்டறிந்து
சட்டதிட்டங்கள் தானறிந்து
சங்கடங்கள் களைவதுவும் - கற்பு.

குண்டாளக் குவளையினில்
தேனான கூழினையும்
காணாத போதினிலும்
கோணாத முகத்தினுடே
கூடியிருந்துண்பதுவும் - கற்பு.

முப்பாலும் வள்ளுவரின்
இரண்டுவரி இணைந்தவரும்
அன்புடமை பகிர்ந்தவரும்
ஆத்திசூடி அறிந்தவரும்
ஆசாரக் கோவையுமாய் அமைவதும் - கற்பு.

**அப்துல் றஹீம் பாயிதா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எனும் அழகிய கவிதை

அம்மா எனும்
அழகிய கவிதை
அன்பின் இலக்கணமே — அம்மா
ஆசையின் உயிர் நாடியே
கருணைக் கடலே — நீ
கண்ணியத்தின் இருப்பிடமே

பாசத்தின் ஊற்றே — மன
பக்குவத்தின் புகலிடமே
புவியிலும் ஒரு படி மேலே —
பொறுமையில் அம்மா
நீ அது என்றால் - மிகையில்லை தாயே
சேவையின் தாதி — நீயோ
சொர்க்கத்தின் ஜோதி.

காணோமே எங்கும் - உனக்கு
இணையான பாசம்
கிடைக்கா தெதிலும் - எமக்கு
இத்துணை அம்சம்
அற்புத உறவு — அதனால்
மகிழும் மனது.

தாயன்பொன்று சுவைக்கின்றதே இங்கு
தனக்கின்றியே யாவும்
ஈன்றவர்களுக்கே ஈயும்
காலம் கண்ட உத்தம நட்பும்
உனதுதானே அம்மா !

கவலையை நீ வாங்கி
சோகங்களையும் நீயேதானே தாங்குகிறாய்.
யாரிடம் சொல்ல
எதிர்ப்பில்லா உன் பணிகளை
மற்றவர்களின் பார்வைக்கன்றி
மறுமையில் சுமந்து வரட்டும் நன்மைகளை

குடும்பத்தின் குலவிளக்காய்
குன்றிலிட்ட தீபமாய் உயர்ந்தபடியே
ஆகிராவிலும் மேன்மை பெற்றிட
வேண்டுகிறேன் தினமும்
அம்மா நீ ஒரு அழகிய கவிதையே.....



**முகைதீன் பாவா ஆமினா**
மருதமுனை — 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லப் பாப்பா

புதுமையின் பிரசவம் பாப்பா
புதிதாய் வந்தது பாப்பா
கையில் தவழுது பாப்பா
கழுத்திலும் தொங்குது பாப்பா
வீதியில் நடந்திடும் போது
சிரிக்குது சினக்குது பாப்பா.

தனிவழி செல்லும் மாதுடன்
துணையெனப் போகுது பாப்பா
கெஞ்சுது கொஞ்சுது பாப்பா
கதை மிகக் கூறுது பாப்பா
பரிபாஷையில் செய்திகள் பதிந்தே
பரிமாறுது செல்லப் பாப்பா.

ஓடும் ரதங்களில் பாப்பா
ஓட்டும் சாரதி கையில் பாப்பா
திசைகள் மாறியே சென்றிட
சதிகளும் செய்யுது பாப்பா
வீதி ஒழுங்கை மீறியே
விதியிடம் போகுது பாப்பா.

தனிமையை விரும்பா பாப்பா
தூக்கத்தில் ஆழ்ந்திடும் போது
இசைத்து எழுப்புது பாப்பா
தூக்கி எடுப்பவர் கன்னத்தில்
முத்தம் சொரியுது பாப்பா
செல்லிடத்து செல்லப் பாப்பா.

**திருமதி. பாத்திமா நஸீறா**
கல்முனை

## சிதைந்த சிற்பம்

வைகறைப் பொழுதொன்றில்
சிதைந்து போயிற்று
நான் செதுக்கிய சிற்பம்.

என் கனவுகளையும்
உறக்கத்தையும் பின்னியே
உருவாக்கிய சிற்பம் அது.

அது –
சிதைந்த போது
என் விழிகளில் வேறொன்றும் புரியவில்லை
கண்ணீரைத் தவிர !

நெஞ்சு வெடித்தது !
ஆறுதல் கூறின உள்ளம்.

ஆனாலும் ..
நீ என்ற சிற்பம் சிதைந்தாலும்
என் மனக் கோட்டையில்
நீயொரு
தங்கச் சிலை தான் !

**அலியார் பாத்திமா ஸஜீதா (றிகாஸா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற பழமொழியை ஒட்டகச்சிவிங்கியை பார்த்துத்தான் சொல்லியிருப்பார்களோ என்னவோ!

காரணம் ஒட்டகச்சிவிங்கி ஒரு சாதுவான மிருகம். மற்ற விலங்குகளுடன் எந்த வம்பு தும்புக்கும் போகாது. ஆனால் வீணாக வம்புக்கு யாராவது வந்து சீண்டினால் அவ்வளவுதான் சிங்கமாக இருந்தாலும் பின்னங்காலால் உதைத்து தள்ளிவிடும்.

## லிங்கன் விரும்பிய இடம்

ஒரு ஞாயிற்றுக் கிழமை அந்த மாதா கோவிலில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. ஆபிரிகாம் லிங்கனும் பிரார்த்தனையில் அமர்ந்து கொண்டார். பிரார்த்தனை முடிந்ததும் பாதிரியார் கேட்டார் "உங்களில் யார் யார் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறீர்கள்"? கிட்டத்தட்ட எல்லோரும் கை தூக்கினார்கள். "நரகத்துக்குப் போக யார் யார் ஆசைப்படுகிறீர்கள்"? கையைத் தூக்குங்கள். நான்கைந்து பேர் தூக்கினார்கள். நீங்கள் ஏன் நரகத்துக்குப் போக விரும்புகிறீர்கள்? எங்கள் நண்பர்கள் அங்தோன இருப்பார்கள். லிங்கன் மாத்திரம் கையைத் தூக்காமல் அமர்ந்திருப்பதை பாதிரியார் கவனித்தார். "நீ எங்கே போக விரும்புகிறய்"? என்று அவரிடம் கேட்டார். லிங்கன் எழுந்து சொன்னார். "வெள்ளை மாளிகைக்கு போக விரும்புகறேன்." வெள்ளை மாளிகை அமெரிக்க குடியரசுத தலைவரின் மாளிகை! லிங்கன் ஆசைப்பட்டது போலவே சில சில ஆண்டுகளில் ஜனாதிபதியாகி அவர் வெள்ளை மாளிகைக்கு போனார்.

## வைத்தியம் எலும்பு மெலிவு

பால் மூலம் நமக்கு கிடைப்பது கல்சியம். இதை விட கூடுதலான கல்சியத்தை வெங்காயம் மூலம் எளிதில் பெறலாம். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் வெங்காயமும் தயிரும் நன்கு சேர்ந்து வந்தால் எலும்பு மெலிவு நோயிலிருந்தும், மாரடைப்பு அபாயத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.

## பார்வையற்றோருக்கு பிரெய்லி எழுத்து.

பிரெய்லி எழுத்து என்றால் என்னவென்று தெரியுமா? பார்வையற்றவர்களும் படிக்கவும் எழுதவும் கூடிய எழுத்துக்கே பிரெய்லி என்று பெயர். வெறும் புள்ளிகளைக் கொண்டே இவ்எழுத்துக்கள் அமையும். அதாவது ஆறு புள்ளிகள் ஒவ்வொரு எழுத்திலும் மாறி மாறி அமைந்திருக்கும். பிரெய்ல் டைப்டைட்உ உண்டு. பிரெய்ல் சுருக்கெழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லூயிஸ் பிரெய்ல் என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவர் இருந்தார். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர் வாழ்ந்தவர். இவரும் எதிர்பாராத விபத்தினால் பார்வையற்றவரானார். பின்னர் நம்பிக்கையுடன் இவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து பார்வையற்றவர் படித்து பயன் பெறும் படியாக புள்ளிகளைக் கொண்டு எழுத்துக்கள கண்டுபிடித்தார். பார்வையில்லாதோர் கை விரல்களால் புள்ளிகளைத் தடவி எழுத்தறிந்து படிப்பர். "பிரெய்ல்" எழுத்து முறை அதைக் கண்டுபிடித்தவரின் பெயராலே விளங்குகிறது.

## சுவாமி விவேகானந்தர் அருள்மொழிகள்.

- மகத்தான காரியங்களைச் செய்வதற்காக ஆண்டவன் நம்மைப்படைத்திருக்கிறான். அந்தக் காரியங்களை செய்து முடிப்போம்.
- உனது எதிர்காலத்தை நீயே உருவாக்குகிறாய். எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்திருக்கிறது.
- வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும் மனவுறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். மனவுறுதியை நீ பெற்றிடு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.
- போராட்டங்களையும் தவறுகளையும் நீ பொருட்படுத்தாதே. ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய்
- பலவீனத்திற்கான பரிகாரம் வலிமையைக் குறித்துச் செயற்படுவதுதான்.

**இரா. தேவராசா**
தம்பிலுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்கான என் துணை

என் பேனா முனைக்குத் தெரியும்
எதற்காக ஏங்குகின்றது என்று
எதிலும் தட்டிக் கேட்கும் தைரியம்
எப்போதும் விட்டுக் கொடுப்பு
எதிலும் விடா முயற்சி
எங்கேயும் சமத்துவம்
ஏற்கும் சகோதரத்துவம்
ஏந்தி நிற்கும் நீதித்துவம்

முனைக்கான என் துணை
மூத்தவங்களின் வழி காட்டுதலிலும்
மூதறிஞர்களின் தட்டிக் கொடுப்பிலும்
மூச்சிருக்கும் வரைக்கும்
முத்திரை பதிக்கும்
மூப்பற்ற இளையோரின் துணை
முனைப்பாக என்றும்

வருடா வருடம்
வளர்கின்ற
வளர் பிறை – நீ
வள்ளல் மனங் கொண்டு
வந்தாரை மகிழ்விக்கும்
வண்ண தொழிற் கூடம்
வாழவைக்கும் வாரீரே.

சாம ஸ்ரீ தேசகீர்த்தி
**அ.றா.அஹமட் நபாயிஸ்** (மருத நபா)
மருதமுனை.

# மூடப்படும் வாசல்கள்

வயிற்றுச் சுமையினை
நிரப்புவதான முனைப்பில்
பாதங்களை (ச்)
சுட்டெரித்து அலைந்து
நிதமும் யாசகர் பவனி.. !

கொழுத்த
பண முதலைகளுடன்
விண்ணப்பம் கோரியபடி
அவர்கள் காத்திருப்பு

அக்கணம் ,
வதனங்களில் நெருப்பு வெகர்
பதிலாய்த் தெறிக்கும்.
அதிகாரிகளைப் போல...!
முன்னேற்பாடாய்
பூட்டப்பட்ட வாசலுக்குள்
எஜமானர்கள்.
இப்படியாய்...
கொழுத்த நேயங்களுடன்
யாசக விண்ணப்பம் கோரிவிட்டு
மனிதாபிதானங்கள்
காத்திருப்பு..!

**மருதமுனை விஜிலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் கைதி கவிதை

ஏழையின் வானில்
எட்டாக் கனிபோல்
எனைத் தீண்டினாய் - நீ
வாழ்வின் நிஜங்கள்
எனைத் தீண்டாதென – நான்
உன் சொர்க்கத்தில்
உலகை மறந்திருந்தேன்.

நமது காதலுலகின் பரிசாக
குழந்தையின் வரவிற்காய்
அனுமதிக்கப்பட்டாய் நீயும்.
வைத்தியசாலையில் நீ வெளிவரும்
தருணத்திற்காய் நொடிப்
பொழுதுகழும் உனக்கான
வரவிற்காய் ஏழேழு ஜென்மக்
கனவுகளுடன் மகிழ்வினில்
திளைத்திருந்தேன்.

கணப் பொழுதினில்
வைத்தியரின் கதைகேட்டு
மயங்கிப் போய்விட்டேன்
வேண்டாத, தெரியா எல்லாக்
கடவுள்களிடமும் மண்டியிட்டேன்
வாழ்வின் எல்லைவரை
போராடினேன்
நீ மட்டும் உயிரோடு வந்தால்
போது மென்று !
என்னுயிரையே எடுத்துக்கொள்
என்று சத்தியம் செய்தேன்
கடவுளுக்கு !

எனை அறியமால் என் அழுகை
எல்லோரையும் அதிர வைக்க
நான் உனக்காய் பிராத்தித்தேன்.
நீயோ எந்தவித சலனமுமின்றி
இமைமூடி விழிப்பதற்குள்
எனை விட்டும் பிரிந்தாய் ஓர்
மயான அமைதியுடன்.
குழந்தை மட்டும் அழுது
கொண்டிருந்தது...!
நம்வாழ்வின் அடையாளமாய்!
நீ மட்டும் மௌனமான
புன்னகையுடன் கண்மூடி(க்)
கிடந்தாய்
"உனை" ஆயுள் கைதியாக்கி
விட்டேன் என்ற
பூரிப்பில் !
உலகத்தில் முதலாவது
பைத்தியக்காரன் போல்
உனை பார்த்தபடி
நானும்
உன் ஆயுள் கைதியாய் !

**றிஸ்வானா எம். இர்ஷாட்**
**கல்முனை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை !

உன்னை எண்ணிப் பார்க்க
யாருக்கு
நேரம் இருக்கிறதோ
இல்லையோ ?
எனக்கு இருக்கிறதம்மா !

பத்து மாதம் பத்திரமாய்
பாதுகாத்ததை ...
நான்
சொல்லவில்லை.

பகலிரவாய்
கண்விழித்து
பராமரித்ததையும்
சொல்லவில்லை.

கெட்ட வழி போகாமல்
பின்னால் நின்று
நீ -
பட்ட பாடு
எதையும் சொல்ல வில்லை.

உற்ற துணையொன்றைத்
தேடி (த்)
தந்ததையும் சொல்லவில்லை
ஏனென்றால்...
இது வெல்லாம்
என் தாய்க்கும்
கடமையம்மா !

ஆனால் ...
ஒன்றே யொன்று உன்னைப் பற்றி
மற்றவர்கள்
காட்டாததை
நீ காட்டவும்
முடியாத அன்பு
இல்லை ;

உன் மடிகிடத்தி
என்னை
அமுதமெனவே
அருந்தத் தந்தாய்!
அற்புதமாய்!

அன்பு என்றால்
என்ன என்று காட்டியிருக்கின்றாய்
அதனால்
அன்புக்கு ஒத்த சொல்
நீ யென்று சொல்வேன்
நான்....

"தாய்மையின் வலி
என்னவென்று
எனக்கும் தெரியும்....
அதனால் தான்
அன்று
அம்மாவுடன் சேர்ந்து
நானும் அழுதேன்
நான் பிறக்கையில்"



**எஸ்.ஐ.எம். ஜிஹான்**
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனை மலர்

கலைஞர்கள் கூட்ட மொன்றில்
அறிமுகப் படுத்தி வாழ்த்தி மகிழச் செய்து
ஊரறிய பத்திரமும் கொடுத்தவனே'
இப்பாட்டால் நௌபலுனை வாழ்த்துகிறேன்

கல்முனை செயலகப் பிரிவின்
வெளியீடாம் முனை மலரை
வருடா வருடம் சிறப்பாய் வெளியிட்டு
கல்முனை செயலகப் பிரிவை
வாசனையுடன் இயக்குகிறா யென்பதை
பாரோர்க்கு காட்டுகிறாய் அது
மிகையான கதையல்ல

நிர்வாக உத்தியோகத்தர் அபுல் ஹசனும்
கலாசார அதிகாரி திருமதி பற்பராசாவும்
ஏனைய கலாசார பேரவையினர்களுமிணைந்து
கலாசார பிரிவையும் ஏனையவற்றையும் வழிநடத்த
உதவுகிறார் நீரும் அவர்களும் கல்முனை செயலகப்
பிரிவை
பல்லாண்டிருந்தாள வேண்டு மென
வேண்டுகிறேன் பெரியோனை அர்சிலிருப்பவனை.

கலாபூஷனம்
**எம். எம். காசீம் ஜி**
கல்முனை

# அன்றும்... இன்றும்...

காதலுக்காய் புறாவைத்
தூது விட்டார்கள்
ஓலைகளில் அன்று .......
கன்னியரதும் காளையரதும்
கைகளில் தவழ்கிறது
கையடக்க தொலைபேசி இன்று ..........

உழைத்த பணத்தை
உண்டு கழிக்காமல்
ஊதியம் சேர்த்தார்கள் அன்று ...............
சுறு சுறுப்பாய் சுகந்தேடி
உழையாமலே ஊதாரியாய்
றீலோட் (Reload) செய்கின்றார்கள் இன்று...........

காளையர்கள் காதலியை தேடி
தூது விட்டார்கள் அன்று .......
கன்னியர்கள் காளையரை நாடி
எஸ் எம் எஸ் (SMS) அனுப்புகிறார்கள் இன்று.......

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
வாழவைத்தார்கள் அன்று ...............
எஸ் எம் எஸ் இலும் பேஸ் புக்கிலும் தொடங்கி
இணையத்தில் இணைகிறார்கள் இன்று ............

போனைக் கண்டு பிடித்தார்கள்
வெறும் பொழுது போக்குக்காக அன்று .............
போனைக் கையில் பிடிக்கிறார்கள்
வெறும் பொழுது போக்குக்காக இன்று ..............

போனைக் கண்டு பிடித்தவன் - அன்று
உயிர் செத்திருப்பான் விஷமருந்தி - இன்று
அன்பு நண்பர்களே! அருமைத் தோழிகளே!
போதுமே இனியும் போன் விளையாட்டு
போகாதே நீயும் அதன் பால் சீர்கெட்டு

நல்லமுனை — **எஸ். அஸீஸ் உல்லா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைப் பிரதேசத்தின் புதுவரவு

## நூல்கள் பற்றியதான குறிப்புக்கள் :- மருதமுனை விஜிலி

| | | | |
|---|---|---|---|
| (01) | நூல் | :- | "காற்றை அழைத்துச் சென்றவர்கள்" |
| | ஆசிரியர் | :- | ஜமீல் |
| | வெளியீடு | :- | புதுப்புனைவு இலக்கிய வட்டம் |
| | முகவரி | :- | 124 ஏ, ஸ்டார் வீதி, பெரியநீலாவணை. |
| | விலை | :- | 250.00 |

## "காற்றை அழைத்துச் சென்றவர்கள்"

கவிஞர் ஜமீலுடைய "காற்றை அழைத்துச் சென்றவர்கள்" கவிதை, நூல் வெளிக் கொணரப்பட்டுள்ளது. ஏற்கனவே இரண்டு நூலோடு இது அவரது மூன்றாவது வெளியீடாகும். 80 பக்கங்களைப் புரட்டும் போது 68 கவிதைகளைக் காணக்கிடைக்கின்றது. ஒரு உச்சமான படைப்பாளியாக இருப்பதைக் காட்டிலும் ஒரு உன்னதமான மனிதனாக இருக்க வேண்டும். எனக் கோடிடும் இவர் ஈற்றில் இப்படி முடிக்கிறார். "என்று நரகலை கிளறுவதற்கு முன்பாக நானே என்னை தூய்மைப்படுத்துகின்றேன்.

ஜமீலின் இக்கவிதைகளில் மூன்று விடயங்களை அவதானிக் முடிகின்றது.

I. பகுத்தறிவற்ற ஜீவன்களை பாடுபொருளுக்கு முனைதல்.

II. இரக்கவுணர்வு மீதான மனப்பாங்கு (Sympathy Attitute)

III. உருவகங்களை உயிரோட்ட முள்ளதாக்கும் கவிதா உத்தி

மேற்குறித்த வகையறாக்களுக்குள் படிந்து கிடக்கும் கவிதைகள் பலதரப்பட்ட உணர்வுகளை தட்டி விடுகிறது.

இங்கு மேற்கூறிய வகை I ற்குள், கரப்பான் பூச்சி, / பூமியைக் கட்டிப் போட்ட வெட்டுக்கிளி, / பாம்புகளின் உலகம் என்பனவைகளாகவும்,

அடுத்து வகை II ற்குள் ஒரு புனைவு கர்த்தாவுக்கு ஏற்படும் பாதிப்புகள், கடந்து வந்த அனுபவங்கள், ஆத்மதிருப்தி இவைகள் கருவளத்தன்மை பெற்று படைப்பாற்றலை மேம்படுத்துவதை நாம் காண்கின்றோம். அவ்வாறு இவர் ஆரோக்கியப் புனைவுகளைத் தந்திருப்பது கவனிப்புக்குரியது. உளநலப் போக்கினையும் சித்தரிப்பதைச் சொல்லலாம். ஆவல் விற்றுச் செல்லும் அவளின் பெருந்துயர்/இரக்கம்/ ஈரமாகும் மனம் / வாப்பா இல்லாத போது இக்கவிதைகள் அவ்வாறானதாகும்.

மூன்றாவது வகை (III) இலக்கக் கவிதைகள் உருவங்களை உயிரோட்டமுள்ளதாக்குகிறது. முறையிடும் பொம்மை / உயிரற்ற எனது அறை / நிழலற்ற நிழல் இவைகள் அடங்கப் பெறும்.

எனவே, ஜமீல் தான் சொல்ல வருகின்ற ஒவ்வொரு கவிதையிலும் நறுக்கென அழகுபடச் சொல்லியிருக்கும். கூடுதலானவற்றில் ஆற்றுப்படுத்தல் (Counselling) மொழி ரீதியான ஆதிக்கம் கைவந்திருக்கின்றது. ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரிக்கி வரி" மொழிதலுக்குள் நிறுத்தக் குறிகளைத் கவனித்திருப்பராயின் (ஆச்சியரியக்குறி/கால்புள்ளி/) இன்னும் கவிதைகள் உரமூட்டப்பட்டிருக்கும் என்பது வாசித்தலின் போது கிடைக்கப் பெற்ற இடை வெளி எனலாம். இதனால் கவிதைகளை ஒரு வாசகன் ஆரம்பத்திலிருந்து உணர்வு பூர்வமாக தனக்குள் மொழி முழுமையாக்கம் செய்து புரிதல் நிலைக்கு வசப்படுத்த வேண்டியிருக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் ஜமீலின் கவிதைகள் தனித்தன்மையானது இன்னும் பல தரப்பட்ட படைப்புக்களை தர வேண்டும் என்பது நமது அவா.

(02) நூல் :- மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி வரலாறு

ஆசிரியர் :- முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

வெளியீடு :- ஆயிஷா வெளியீட்டகம், மருதமுனை

## "மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் வரலாறு ஒரு பார்வை"

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் நூலாசிரியர் எம்.எம். நௌபல் அவர்கள். கல்முனை பிரதேச செயலாளராக பணிபுரியும் இவர் பல தரப்பட்ட நூல்களுக்கு உரித்துடையவர் இலக்கியச் செயற்பாட்டாளராகவும், சிறந்த வாசகத் தன்மையுள்ளவராகவும் திகழும் இவர் ஏற்கனவே மருதமுனை வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம்) பாகம் I, II, பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் சேவைகள் (பொதுமக்களுக்கான வழிகாட்டி) ஆகிய பெறுமானப்படுத்தப்பட்ட நூல்களை நமக்குத் தந்தவர்.

இம்மத்திய கல்லூரியின் ஆரம்ப வரலாறு புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் அவர்களால் சில சஞ்சிகைகளில் எழுதப்பட்டுள்ளது. ஆயினும் இக்கல்லூரியின் பூரண வரலாற்றினை தொகுக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டதன் விளைவாக இந்நூல் அத்தேவையினை பூர்த்தி செய்துள்ளது.

இந்நூலானது இம்மதிய கல்லூரியின் ஆரம்ப வரலாற்றில் இருந்து (1912 ஆம் ஆண்டில்) மிக நேர்த்தியாக தற்போதைய அதிபர் ஜனாப். எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா வரை தொகுக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்பகால கல்வி வளர்ச்சிக்கு தமிழ் சமூகத்தினை சேர்ந்த கல்விமான்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள் என்பதை இந்நூல் மறக்காமல் நினைவு படுத்தியுள்ளது மெச்சத்தக்கது. உதாரணமாக இப்பாடசாலையின் முதல் அதிபர் யாழ்பாணத்தினைச் சேர்ந்த திரு. பி.சின்னையா இரண்டாவதாக அதிபர் திரு. ஜே.எஸ். வேலுப்பிள்ளை மற்றும் திரு கே.எஸ். வைரமுத்து என பல தமிழ் சமூகத்தினை சேர்ந்த கல்விமான்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், இவ் ஊரின் கல்வி வளர்ச்சிக்கும் பங்காற்றியுள்ளார்கள் என்பதை ஆதாரங்களோடு தொகுக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் முழுமையான வரலாற்றினை இயலுமான வரை இந்நூல் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் இருக்கும் பாடசாலைகளின் வரலாறுகளும் தொகுக்கப்படுவதற்கு இந்நூல் முன்மாதிரியாக அமையும் என்றால் மிகையாகாது.

இந்த வகையில் தான் கற்ற பாடசாலையை முன்நிறுத்தி அதனூடே அபிமானங் கொண்டு பதிவுகளை வெளிக் கொணர்ந்துள்ளார். இது மூன்று வகையறாக்க அடங்கப் பெற்றுள்ளது.

I. பாடசாலையின் சுருக்க வரலாற்றுத்தடம்.

II. அணி சேர்த்த பெருந்தகைகள்

III. பாடசாலையிலிருந்து பட்டப்படிப்பிற்காக பல்கலைக்கழகம் இணைந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உள்ளக ஆவணமாய் இடம் பிடித்துள்ள இந்நூல் "கல்வித்தாய்க்கு" சமர்ப்பணமாகும். அதே வேளை வலுப்பெறும் அணிந்துரையும் கவனத்திற்குரியது. "உண்மைப் பதிவுகள், எம்மை புதியதொரு தடத்திற்கு இட்டுச் செல்வதோடு நம்மவர் தொன்மம் பற்றிய மீட்டுருவாக்கத்திற்கும் வழிவகுக்கும்" என செல்கிறது சத்தார் எம். பிர்தெளவ்ஸ் அவர்களின் குறிப்புக்கள்.

பாடசாலையின் ஆரம்ப உருவாக்கம், பின்னரான அபிவிருத்தி நோக்கு, சமூகம் உள்வாங்கிய வெளியீடுகள், கல்விப்புலமை, பாடசாலை கடந்து வந்த நாட்குறிப்பு, அலங்கரித்த அதிபர் ஆளுமைகள், இவ்வாறு இன்னோரன்னவைகளை புடம் போட்டுக் காட்டியிருப்பது கல்வெட்டுக்கள் போல பதிவாயிருக்கிறது. பாடசாலையிலிருந்து கற்று பல்கலைக்கழகம் கால் பதித்த பட்டதாரிகளையும், பட்டியலிட்டிருப்பது எதிர்கால தேவை கருதிய சந்ததியினருக்கான பொக்கிசமாகும். ஏற்கனவே தொடர்ச்சியாக ஐந்து "முனைமலர்" சஞ்சிகைகளையும் விசேட மலரையும் வெளிவருவதற்கு கால் கோளயிருந்து அதன் ஆசிரியராகவும் நம்மிடையே கிடைக்கச் செய்தவர்.

எனவே, மேலும் பல நூல்களை கல்விச் சமூகத்திற்கும், இலக்கிய உலகிற்கும் தரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| (03) | நூல் | :- | மணிப்புறா - இலக்கிய சஞ்சிகை - தேவை கருதிய புனைவு |
| | ஆசிரியர் | :- | அக்கரைப்பாக்கியன், துணை ஆசிரியர் :- புதுமைவாணன் |
| | வெளியீடு | :- | செ. துஜியந்தன் (தலைவர்) (அகரம் சமூக சேவை அமைப்பு) |
| | முகவரி | :- | 111, அருச்சுனர் வீதி, பாண்டிருப்பு – 01, கல்முனை |

## மணிப்புறா - இலக்கிய சஞ்சிகை (தேவை கருதிய புனைவு)

வடகிழக்கு மண்ணில் போர் முடிந்த கையோடு இலக்கியத்தின் தன்மை பிறிதொரு மாற்றமாய்ச் செல்வதை அவதானிக்கலாம். நமது பிரதேசங்களிலிருந்து அவ்வப் போது தொடராக வெளிவந்த முனைப்பு, பெருவெளி, வியூகம், சஞ்சிகைகள் தற்போது நீண்ட கால இடைவெளியில் வரவு நிலை இல்லை என்றே கூறலாம். இருந்தும் பாண்டிருப்பைத் தளமாகக் கொண்டு தருவிக்கப்படும். "மணிப்புறா" சஞ்சிகையானது பல விடயதானங்களை நிரப்பிக் கொண்டு தலை காட்டுகிறது. இந்த வகையில், இது தனக்குள் சிலவற்றை அடையாளப்படுத்தி விரிந்து செய்கிறது.

அட்டையின் முகப்புக் கீறல் தேசத்தின் அபிவிருத்தி கருதிய மட்டக்களப்பு பாலத்தை அடையாளப்படுத்துகின்றது. சிறுகதை, கவிதை, கட்டுரை, ஆரோக்கியக் கட்டுரைகள் என்பன இடம்பிடித்துள்ளன. ஒரு கால இடைவெளியை தெரியப்படுத்துகின்றது. கவிதைகளை கே.எம்.ஏ. அஸீஸ், கல்லூரன், நூத் சந்திரிக்கா அக்கரை மாணிக்க வாசகன், சித்தி நயீமா வஸீகரன் போன்ற கவிஞர்களும் சிறுகதையினை புதுமைகளும் வாணனும் மேலும் மாணவர் பக்கம் என்ற வித்தியாசமான விடயதானமும் தாங்கி வருகின்றது.

கட்டுரையைப் பொறுத்தரவரையில், செ. துஜியந்தனின் மட்டக்களப்பு புதிய கல்லடிப் பாலம் இச்சஞ்சிகைக்கு முத்தாய்ப்பாக முழுமைப்படுத்தப்படுகின்றது. பொதுவில் தொடர்ந்து இச்சஞ்சிகை வெளிவருமாக இருந்தால் காலத்தால் பேசப்படும் என்பது யாதார்தமாகும். இதில முக்கியவிடயமாக மாணவர்களின் இலக்கிய ஆற்றலை மேம்படுத்ததும் திறன்கள் இடம்பிடித்து இருப்பது மேலும் இச்சஞ்சிகைக்கு வளப்படுத்தலை ஏற்படுத்துகின்றது.

**- மருதமுனை விஜிலி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயம்

இதயத்தில் நான் இல்லை
என்பதால்
இதயத்தை கழற்றி எறிந்தேன்
என்னுடையதை
காட்டினூள் எகிறிப்பாய்ந்து சென்றது
மரம் செடி கொடி மிருகங்களிடம்
கெஞ்சிக் கேட்டுக்
கொண்டேன்
இதயத்துள் அவள்
இருக்கின்றாள் என்பதற்காக
பாதுகாப்பாக இருக்கட்டும் என்று
செடி கொடி மிருகங்கள் வாழும் காட்டில்
இரக்கமில்லா மனிதர்கள்
வாழும்
இவ்வுலகத்தில்
பத்திரப்படுத்துமாறு
கேட்டுக் கொண்டேன்
இன்றுமொரு நாள்
தேவைப்படும் என்பதற்காக....

**எம்.எம். நௌபல்**
பிரதேச செயலாளர்
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரனையாளர்

# கிராம அபிவிருத்திச் சங்கம்

## மருதமுனை – 06

# Rural Development Socity
# Maruthmunai – 06

கல்முனைப் பிரதேச
“கலாசார விழாவும், புத்தக வெளியீடும்
சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

**M.T.M. HAROON (JP)**
இளைஞர் சேவை அதிகாரி – நிந்தவூர்
தலைவர் - கிராம அபிவிருத்திச் சங்கம்
SESDO அமைப்பின் மாதர் சங்க இணைப்பாளர்
அனைத்து பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்
சிவில் பாதுகாப்பு உறுப்பினர்
மருதமுனை – 06

**P.M. ARAFATH YASEEN (JP)**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சமூக சேவைத்திணைக்களம்
செயலாளர், கிராம அபிவிருத்தி சங்கம்,
சிவில் பாதுகாப்பு உறுப்பினர்
மருதமுனை – 06

**M.H.M. THASNEEM**
பொருளாளர்
கிராமிய அபிவிருத்திச் சங்கம்
அனைத்து பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்
மருதமுனை - 06

**S.M.M. JAMALDEEN**
கிராம அபிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் மருதமுனை - 05 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் செய்யப்பட்ட அபிவிருத்திகளின் ஒரு பார்வை

எமது சங்கம் கல்முனையின் அன்றைய பிரதேச செயலாளாரும், இன்றைய கிழக்கு மாகாண அபிவிருத்தி, கிராமிய மின்சாரம், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருமான ஏ.எச்.எம். அன்சார் அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டது. எமது சங்கத்தின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் தற்போதைய கல்முனை பிரதேச செயலாளராக உள்ள எம்.எம். நௌபல் அவர்களினதும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.எம். ஜமால்டீன் அவர்களினதும் காலப் பகுதி என்றால் அது மிகையாகாது. மேலும் சங்கத்தின் செயலாளராக இயங்கும் சாமசிறி. தேசகீர்த்தி. பீ.எம். நஸ்றுத்தீன் (JP) Bsc அவர்களின் முழு மூச்சான செயற்பாடு காரணமாகவே சங்கம் பாரிய அளவிலான அபிவிருத்திகளை பொது மக்களுக்கு செய்தது என்பதை யாருமே மறுக்க முடியாது. இவருடன் சேர்ந்து சங்கத்தின் தற்போதைய தலைவர் எம்.ஐ.எம். ஆரிப் (JP), பொருளாளர் ஏ.சீ.ஏ. றஹீம் போன்றோர்களும், சங்க நிர்வாகிகளும் பங்களிப்பு செய்துள்ளனர். சங்கத்தினர் கடந்த காலங்களில் கிடைத்த வருமானங்கள் மூலம் பொதுமக்களுக்கு செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

- மருதமுனையில் ஆயுள்வேத மருந்தகம் இயங்குவதற்காக எங்களுக்கு சொந்தமான பல்தேவைக்கட்டிடத்தை எந்தவித வாடகையும் இன்றி அதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தோம்.
- எங்களினால் கட்டப்பட்ட பாலர் பாடசாலைக்கு தேவையான, குடிநீர்வசதி, மின்சாரம், தளபாட வசதி, தொலைக்காட்சி பெட்டி போன்றவற்றை பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் அவர்கள் ஊடாக சங்கத்தினால் வழங்கப்பட்டது. தற்போது இப்பாலர் பாடசாலை "Shams 95" அமைப்பினரால் வழிநடாத்தப்பட்டு வருகின்றது.
- மருதமுனை அல் ஹம்றா வித்தியாலயத்திற்கு தேவையான 05 கணணி மேசைகளும், பீ.எம்.எம். பதுறுத்தீன் அதிபர் அவர்களின் காலப்பகுதியில் வழங்கப்பட்டது. அத்துடன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு நிதிஉதவி சங்கத்தினால் வழங்கப்பட்டது.
- மருதமுனை அல் மதீனா வித்தியாலயத்திற்கு அலுவலக மேசை Conference Table & Chair மற்றும் அலுவலக காபட் போன்றன சங்கத்தினால் வழங்கப்பட்டது.
- மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரிக்கு தற்போதைய அதிபரிடம் பிரதேச செயலாளரின் ஊடாக மலசலகூடம் அமைப்பதற்காக உதவி வழங்கப்பட்டது.
- மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு 02 Stand fan களும், வைத்தியசாலையின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள Pond (நீர்த்தடாகம்) போன்றன எங்களின் சங்கத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டது.
- மருதமுனையில் ஆண்களுக்கான அறபுக்கல்லூரி (அந்-நஹ்ழா அறபுக் கல்லூரி)க்கு குளிர்சாதனப் பெட்டியும், காபட்டும் சங்க நிதியிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
- மருதமுனை கபீர் பள்ளிவாசலுக்கு ஒலி பெருக்கி சட்டத்தரணி அமீருல் அன்சார் மௌலானா பள்ளிவாசலுக்கு தலைவராக இருந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டது.
- மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரிக்கு Plastic கதிரைகள் எஸ்.எல்.எம். ஜமால்தீன் அதிபர் காலத்தில் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றதற்காக அதனை கௌரவிப்பதற்காக பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கமைய விளையாட்டு வீரர்களுக்கான பாதணிகள் சங்க நிதியிலிருந்து அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- வெள்ள நிலமையின் போது மருதமுனை – 05 பிரிவு மக்களை மையப்படுத்தி பொதுமக்களுக்கு பகல் உணவாக பாண் சங்க நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

- யுனப்ஸ் ஊடாக செயற்படுத்தப்பட்ட வடிகானை மேற்பார்வை செய்தலும் மக்கள் பங்காளிகளாக எமது சங்கம் அவர்களுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. அதனூடாக எமது பிரதேச இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் திருப்திகரமாக வடிகான் அமைப்பும் மேற்கொள்ளப்பட்டமை.

- Human Link ற்கு ஒரு மாத கால காலை உணவு – 7000/- வழங்கப்பட்டது.

- எமது பாலர்பாடசாலையுடன் இணைந்ததாக உள்ள வாசிகசாலை கட்டுமானப் பணிக்கு ரூபா 20000/- ரூபா சங்க நிதியினூடாக அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (செங்கல் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்டது)

- மருதமுனை மையவாடியிலுள்ள அலுவலக அறை விஸ்தரிப்புக்காக செங்கல் கொள்வனவு செய்துகொடுத்தது (மருதமுனை ஜனாஸா நலன்புரிச் சங்க தலைவரின் ஊடாக)

- மாணவர்கள் பொதுமக்களுக்கு உளநலம் சம்பந்தமான விழிப்பூட்டல் கருத்தரங்கள் நடாத்தப்பட்டமை (கமு/அல் ஹம்றா வித்தியாலயம், கமு/ஷம்ஸ் மத்திய கல்லூரி) போன்றவற்றிலும், பொதுமக்களுக்கு பல்தேவை கட்டடத்திலும் நடாத்தியமை.

- உள நல விழிப்பூட்டல் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டமையும் பொதுமக்களுக்கு வினியோகித்தமையும்.

- செஸ்டோ தகவல் நிலைய தளபாட கொள்வனவு 12500/- அன்பளிப்பு செய்யப்பட்டது.

- தாருல் ஹுதா அறபிக் கல்லூரிக்கு தளபாடம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

- கிராம அபிவிருத்தி பேராளர் மகாநாட்டுக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக நிதி வழங்கப்பட்டது.

- 2009 ஆம் ஆண்டு கலாசார விழாவிற்கு நிதிஉதவி செய்யப்பட்டது.

கடந்த காலங்களில் இவ்வாறான பொதுச் சேவைகளை சங்க நிதியினூடாக செய்வதற்கு பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் அவர்களும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.எம். ஜமால்டீன் அவர்களும் எங்களுக்கு செய்த உதவிக்கு என்றுமே எமது பொதுமக்கள் நன்றி பராட்டுகின்றார்கள். அதே போல் சங்க நிருவாகிகளும் ஆற்றிய சேவைகளை நினைவு கூருவதுடன் அவர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாமசிறி, தேசகீர்த்தி
**பீ.எம். நஸ்றுடீன்** (JP)
Bsc (Nur), Dip – in-Nur, Dip-in.Coun
பொதுச் செயலாளர்
கிராம அபிவிருத்திச் சங்கம்
மருதமுனை - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Abna Print - 0772256648